Registered as a Newspaper
பக்கங்கள் 24 | விலை ரூ. 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 50

திங்கட்கிழமை
15 ஜனவரி 2024

தை 01 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அவையளும்
கண்டிச்சு அறிக்கையள்
விட்டாலும் இவையள்
திருந்திறமாதிரி
இல்லையே"




# சிறுபான்மையினர் மீது தொடர் ஒடுக்குமுறை!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கை

**கொழும்பு, ஜனவரி 15**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சிறுபான்மை மக்கள் மீது தொடர்ச்சியாக அடக்குமுறைகளைப் பிரயோகித்து வருகின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

23

# இப்போது இல்லாவிடில் இனி எப்போதுமில்லை!

## அநுர நேற்றுக் கண்டியில் உரை



கொழும்பு, ஜன. 15

சீரழிவுடைய அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுத்து நாடாளுமன்றத்துக்கு அனுப்பிய மக்களும், இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கும் பிற்போக்குத் தனங்களுக்கும் காரணம். ஆதலால், மக்கள் முதலில் விழிப்படைந்து சரியானவர்

23

# புதிய வரிக்கொள்கை எமக்குப் பெரும்சுமை!

## நாணய நிதிய பிரதிநிதிகளிடம் யாழ். வர்த்தகர்கள் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜனவரி 15

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள எமக்கு தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிக்கொள்கைகள் மேலும் சுமையாக அமைந்துள்ளன என்று யாழ்ப்பாண மாவட்ட சிறு

23

# கைக்குண்டுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 15

இளவாலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், நபரொருவர் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

23

# முதியவர் ஒருவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜன. 15

வட்டுக்கோட்டை தெற்குப் பகுதியில், கிணற்றுக்குள் இருந்து முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் இராசு (வயது-69) என்ற நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார். அவர் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என்று தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

மயிலத்தமடு

# மாடுகளுக்கு நீதிகேட்டு கவனவீர்ப்புப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 15

மட்டக்களப்பு, மயிலத்தமடுவில் பசுக்களுக்கும் காளைகளுக்கும் இழைக்கப்படும் கொடுமைகளைக் கண்டித்தும், பாதிக்கப்பட்டுள்ள மாடுகளுக்கு நீதிகோரியும் யாழ்ப்பாணம் நல்லை ஆதீன முன்றிலில் நாளை மாலை 5 மணியளவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு - மயிலத்தமடு, மாதவனை மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர்செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

வெங்காய வெடி வைத்து கால்நடைகளின் வாயில் கொடும் காயங்களை

23

# மின்கட்டண சீரமைப்பு ஏமாற்று நடவடிக்கை!

## காமினி லொக்குகே எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 15

மின்சாரக் கட்டணத்தை 15 வீதமளவில் குறைக்க முடியும். ஆனால், வெறும் 3.34 வீதத்தால் குறைப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்கட்டணக் குறைப்பு என்ற பெயரில் ஏமாற்று நாடகமொன்றே அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்

23

# யானைதாக்கி ஒருவர் பலி!

வவுனியா, ஜன. 15

வவுனியா வடக்கு, வேலங்குளம் பகுதியில் யானை தாக்கி நபரொருவர் உயிரிழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு வேளையில் இருவர் மோட்டார்சைக்கிளில் சென்றபோது வீதியோரமாக நின்ற யானை அவர்களைத்

23

# கால்வாய்க்குள் வீழ்ந்து இரு இளைஞர்கள் பலி!

## கிளிநொச்சியில் சோகம்

கிளிநொச்சி, ஜன. 15

கிளிநொச்சிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள, இரணைமடுக்குளத்தின் பிரதான கால்வாய்க்குள் இருந்து இளைஞர்கள் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம், கல்மடுநகர் பகுதியைச் சேர்ந்த தயாளன் தனுசன் மற்றும் இராமநாதபுரம், அழகாபுரி பகுதியைச் சேர்ந்த கிருஷ்ணன் சதீசன் ஆகிய இருவருமே சடலங்களாக மீட்கப்பட்டவர்களாவர். சடலங்கள் கிளிநொச்சி நீதிவான் முன்னிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக

23

உயர்தரப் பரீட்சை

# வினாத்தாள் மோசடி: ஆசிரியர் கைதானார்

கொழும்பு, ஜன. 15

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கான விவசாய விஞ்ஞான வினாத்தாள், பரீட்சைக்கு முன்னரே வெளியான சம்பவம் தொடர்பில் அம்பாறையைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுப் பிரிவால் கைதுசெய்யப்பட்ட

23

உ/த விவசாய விஞ்ஞானம்

# பெப்ரவரி 1இல் பரீட்சை!

கொழும்பு, ஜன. 15

க.பொ.த. உயர்தர பரீட்சைக்கான விவசாய விஞ்ஞானப்

23

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
14 EDITION
JITF 2024
JANUARY ஜனவரி
19 20 21
10.00 மு.ப - 8.00 பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 4 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூடு பிடித்தது பொங்கல் வியாபாரம்



யாழ்ப்பாணம், ஜன.15
தைப்பொங்கலை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிரதான சந்தைகளில் தைப்பொங்கல் வியாபாரம் அமோகமாக நடைபெற்றதைக் காண முடிந்தது.

தைப்பொங்கலுக்குத் தேவையான பொருள்களை மக்கள் ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர். அதே நேரம் பல இடங்களில் வீதியோரங்களிலும் தைப்பொங்கலுக்கான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. (எ-66-9)

# பொங்கல்விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜன.15
தைப்பொங்கலை முன்னிட்டு கோப்பாய் தெற்கு பழைய வீதி வீரபத்திரர் கோயில் சீரடி பாபா முன்றிலில் சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் தேவாரக் கச்சேரி இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ய)

* * * *

மட்டுவில் வடக்கு வேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் தைப்பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நிலைய முன்றிலில் இடம்பெறும். நிலையத் தலைவர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதேச உழவர்கள் மதிப்பளிப்பும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கலும் இடம்பெறும். (ய-9)

* * * *

யாழ்ப்பாணம் , ஜன.15
இந்துக் கல்லூரியின் இந்து இளைஞர் கழகம் நடத்தும் தைப்பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணி முதல் மேற்படி கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது. (ய-66)

* * * *

தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழா யாழ். காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலக இணைப்பாளர் கந்தசாமி கருணாகரன் ஒருங்கிணைப்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச பங்குபற்றுதலுடன் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ரி-20)

* * * *

கொடிகாமம், ஜன.15
மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலைய தமிழர் திருநாள் பொங்கல் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.35 மணிக்கு நிலைய வளாகத்தில் தலைவர் க.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ-159)

* * * *

யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் இந்துமாமன்றத்தின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முற்பகல்10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ய-66)

# சாதனை நிகழ்வு இன்று

சாவகச்சேரி ஜன.15
மட்டுவிலைச் சேர்ந்த சாதனையாளர் செல்லையா திருச்செல்வம் தாடிமுடியில் ஆயிரத்து 500 கிலோ நிறையுடைய வாகனத்தை கட்டி ஆயிரத்து 500 மீற்றர் தூரம் இழுத்துச் செல்லும் சாதனை நிகழ்வு சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் இன்று திங்கட்கிழமை மு.ப 11மணிக்கு நடைபெறவுள்ளது.

பேருந்து நிலையத்திலிருந்து ஏ-9 வீதியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வரை சென்று அங்கிருந்து மீண்டும் பேருந்து நிலையத்துக்கு இழுத்து வரவுள்ளார்.

சாவகச்சேரி வீ.எம்.கே.நகைமாளிகை அனுசரணையுடன் நடத்தப்படும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ். எம். சார்ள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார். (எ-ரி-9)



# சட்டவிரோத மணலுடன் சிக்கிய டிப்பர்கள்


கிளிநொச்சி, ஜன.15
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு மற்றும் பிரமந்தனாறு பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் நான்கு டிப்பர்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன், அவற்றின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

தருமபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனையின்போதே டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி-113)



யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பொங்கல் தினத்தை முன்னிட்டு தமது அங்கத்தவர், பணியாளர்களுக்கு பொங்கல் பொதிகளை வழங்கியது. (ரி-63)



ஆதிரை அமைப்பின் அனுசரணையில் சண்டிலிப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 5 கிராம பொது அமைப்புகளுக்கு தைப்பொங்கல் பொதிகள் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டன. (ச-66)



தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தைப்பொங்கலை முன்னிட்டு நாவாந்துறையைச் சேர்ந்த 70 குடும்பங்களுக்கு தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைமை அலுவலகத்தில் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத் தலைவர் பொ.ஐங்கரநேசனால் பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன. (ரி-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மீது அக்கறையில்லை செங்கடலைக் காக்க கப்பல்

## சாடுகின்றார் பேராயர் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஜன.15

**நாட்டு மக்கள் தொடர்பில் ஆட்சியாளர்களுக்கு துளியளவும் அக்கறை இல்லை. ஆனால், செங்கடலுக்கு போர்க் கப்பல் அனுப்புகின்றனர். இது தேவையற்ற விடயமாகும் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.**

நாட்டில் சட்டம் இல்லை எனவும், அடுத்த தேர்தலில் ஊழல் அரசியல்வாதிகளுக்கு மக்கள் பாடம் புகட்ட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு பொரளை அனைத்து புனிதர் தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்டு இரு வருடங்கள் கடந்துள்ள நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பில் முறையான - முழுமையான விசாரணை இன்னும் நடத்தப்படவில்லை எனச் சுட்டிக்காட்டி, நேற்றுக் காலை வழிபாடு இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முறையான விசாரணை நடத்தாமல், ஊகத்தின் அடிப்படையில் முடிவுக்குவந்து அது தொடர்பில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன. இந்த நாட்டில் சட்டம் என ஒன்றும் இல்லை. மக்களின் பட்டினி தொடர்பில் உணர்வு இல்லாத அரசியல்வாதிகள்தான் தலைவர்களாகவுள்ளனர்.

இந்த வருடம் தேர்தல் நடைபெறவுள்ளது. தேர்தலை நடத்துவார்கள் என நம்புகின்றோம். ஊழல்வாதிகளுக்கு தொடர்ந்தும் இடமளிக்கக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

## 12 நாள்களில் 57 பேருக்கு டெங்கு

சாவகச்சேரி, ஜன.15

தென்மராட்சியில் இந்த ஆண்டின் 12 தினங்களில் 57 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

டெங்குத் தொற்றுத் தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும், டெங்கு நுளம்பு உற்பத்திக்கு ஏதுவான இடங்களை இனங்கண்டு அழிக்கவேண்டும் என்றும் சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். (எ-9)



## 771 பேர் கைது

கொழும்பு, ஜன.15

நேற்றுக் காலை வரையான கடந்த 24 மணித்தியாலங்களில் யுக்திய சுற்றிவளைப்புகளில் 771 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

192 கிராம் ஹெரோயின், 101 கிராம் ஐஸ் மற்றும் 10,611 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## கஞ்சா கடத்தல்; குடும்பஸ்தர் கைது

மோட்டார்சைக்கிள் இருக்கைக்குள் கஞ்சாவை மறைத்துச் சென்ற குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட அதிரடிப் படையினர் புளியங்குளத்தில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த நிலையில், புதுக்குடியிருப்பில் இருந்து ஏ-9 வீதி ஊடாக பொல்காவல நோக்கி மோட்டார்சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தரை மறித்துச் சோதனையிட்டனர்.

மோட்டார்சைக்கிள் பின் இருக்கைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோ 375 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. அதையடுத்து பொல்காவலையைச் சேர்ந்த 47 வயதான குடும்பஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ-18)

## தப்பியோர் சரண்

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் இருந்துதப்பிச்சென்ற 15 கைதிகளைத் தவிர ஏனையோர் சரணடைந்துள்ளனர் என்று புனர்வாழ்வு நிலையம் தெரிவித்துள்ளது.

புனர்வாழ்வு நிலையத்தின் செயற்பாடுகள்தற்போதுவழமைக்குத்திரும்பியுள்ளன என்று புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம்மேஜர்ஜெனரல்தர்ஷன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். கைதிகள் குழுவுக்குள் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையில் கைதிகள் குழுவொன்று காயமடைந்தது மற்றுமொரு குழு தப்பிச் சென்றிருந்தது. (எ-இ)

## இலங்கையில் முதன்முறையாக இரத்தினக்கல் ஆய்வுமையம்

கொழும்பு, ஜன.15

இலங்கையில் முதன்முறையாக இரத்தினக்கல் ஆய்வு மையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

அமெரிக்க மற்றும் சீன நிறுவனங்கள் இணைந்து வழங்கும் முதலீட்டின் ஊடாக பேருவளையில் இந்த ஆய்வு மையம் அமைக்கப்படவுள்ளது.

10 இலட்சம் ரூபா அமெரிக்க டொலர் முதலீட்டில் இந்த ஆய்வு மையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பாடசாலையை உடைத்து தொலைக்காட்சி திருட்டு

வவுனியா, ஜன.15

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையொன்றிலிருந்து பெறுமதிமிக்க தொலைக்காட்சி திருடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நடந்துள்ளது.

பாடசாலை வளாகத்துக்குள் உள்நுழைந்த திருடர்கள் அங்குள்ள வகுப்பறை கட்டடம் ஒன்றின் கதவை உடைத்து பெறுமதிமிக்க தொலைக்காட்சி ஒன்றை திருடிச்சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-110-18)

## தினம் தெரியுமோ?

**இன்டைக்கு எல்லாரும் வீட்டில நல்ல சந்தோசமாப் பொங்கி, சாப்பிட்டு கொண்டாடியிருப்பியள். ஆனால் எதுக்காக தைப்பொங்கலைக் கொண்டாட வெளிக்கிட்டமோ அதில இருந்து நாங்கள் வேற திசையில போய்க்கொண்டிருக்கிறம்போல படுகுது. தைப்பொங்கலை ஏன் கொண்டாடுறம்? எங்களுக்கு எல்லாத்தையும் தந்த சூரியனுக்கு நன்றி சொல்லத்தானே.**

**முந்தி எல்லாரும் வயல் செய்தம், வீட்டில நெல்லும், அரிசியும் இருந்திச்சுது. மாடுகள் வளர்த்தம். குடம் குடமா பால் இருந்திச்சு. அதைவிட தோட்டம் செய்தம், தேங்காய், மரக்கறி, உளுந்து, பயறு, எண்ணெய் எண்டு எல்லாமே எங்கட வீட்டிலையே இருந்திச்சு. அதாலதான் புதுநெல்லில அரிசி இடிச்சு, பொங்கி சூரியனுக்குப் படைச்சு எங்கட நன்றியைச் சொல்லக் கூடியதா இருந்தது.**

**ஆனால் இப்ப அப்பிடியோ? வயல் செய்யிற ஆக்களை விரல்விட்டு எண்ணலாம். அதைவிட மாடு வளர்க்கிறவை இன்னும் குறைவு. நேற்று மத்தியானத்தில இருந்து இரவு வரைக்கும் எல்லாப் பால்சாலையிலையும் நிவாரணத்துக்கு நிண்டமாதிரி பெரும் 'கியூ'. ஆரோ வீட்டுப் பாலை வாங்கி எங்கட வீட்டில பொங்கல் கொண்டாடுற துக்குத்தான் உந்தக் 'கியூ'. சரி, வீட்டில இல்லாத ஒண்டிரண்டு சாமான்களை வாங்கிறதெண்டால் அதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இப்ப எல்லாத்தையுமெல்லோ ரெடிமேட்டா வாங்க வெளிக்கிட்டம்.**

**நேற்று யாழ்ப்பாணத்தில கன இடங்களில தோரணக்கடையள் முளைச்சிருந்ததைப் பார்த்திருப்பியள். தென்னோலைக் குருத்தை வெட்டி, பின்னின தோரணம் ஒண்டு பத்து ரூபாவில இருந்து இருபது ரூபா வரை வித்தவை. ஆனால் தோரணம் பின்னப் பின்ன வித்துக் கொண்டே இருந்திச்சு. அந்தளவுக்கு தோரணத்துக்கு கடும் மவுசு. ஒருகட்டத்தில தோரணம் பின்னிக் களைச்சுப் போன கடைக்காரர், தோரணம் இல்லாத ஒரு தென்னோலைக் கீத்து பத்து ரூபா எண்டிச்சினம். அதையும் எங்கட சனம் விடேலை. அள்ளிக்கொண்டு போச்சுதுகள். கடைசியில தோரணம் பின்னுப் படாத அந்த வெறும் தென்னோலைக் கீத்துக் கூட கிடைக்கேலை எண்டு கவலையோட போன ஆக்களும் இருக்கினம். இப்பிடியே போச்சென்டால் அடுத்தடுத்த வருசங்களில மாவிலை, அறுகம் புல்லு, சாணகம் எண்டதுகளையும் காசு குடுத்து, ரெடிமேட்டாத்தான் வாங்கவேண்டி வரும்போல.**

**எல்லாத்துக்கும் காரணம், எங்கட பஞ்சிக்குணமும், தென்னை, மா மாதிரி பயன்தாற மரங்களையெல்லாம் வெட்டித் தறிச்சுப் போட்டு, எல்லா இடமும் கட்டடங்களை எழுப்பினதும் தான். இப்பிடி காசு குடுத்து எல்லாச் சாமானையும் ரெடிமேட்டாவாங்கி சூரியனுக்கு நன்றி சொல்றதைவிட, பேசாமல் அந்தக்காசை சூரியனுக்கே நேரடியா அனுப்பி நன்றியைச் சொல்லுவம் எண்டுற காலமும் வந்திடுமோ?**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியியலாளர் புலம்பெயர்வால் நெருக்கடியில் சிக்கிய இலங்கை!

கொழும்பு, ஜன.15
பொருளாதார நெருக்கடி காரணமாகக் கடந்த ஆண்டு ஆயிரத்து 700 க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் 900 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
இது இலங்கையின் மருத்துவத்துறையையும் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கையையும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.
தற்போது விரிவுரையாளர்கள் மத்தியில் 50 சதவீத வெற்றிடம் காணப்படுகின்றது என்று தெரியவருகின்றது.
சுமார் ஒரு இலட்சத்து 55 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர் தொகையைக் கருத்தில் கொண்டு, இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு உகந்த முறையில் இயங்குவதற்கு சுமார் 13 ஆயிரம் விரிவுரையாளர்கள் தேவைப்படுகின்றனர்.
தற்போது 6 ஆயிரத்து 500 விரிவுரையாளர்கள் மாத்திரமே பல்கலைக்கழகங்களில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். (எ-இ)

## சூதாட்ட நிலைய கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.15
சூதாட்டநிலையங்களுக்கான அனுமதிப் பத்திரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு நேற்று அறிவித்தது.
250 மில்லியன் டொலர் முதலீடு செய்யும் விண்ணப்பதாரர்கள் புதிய உரிமைக் கட்டணமாக 10 பில்லியன் ரூபா செலுத்த வேண்டும். உரிமைத்தைப்புதுப்பிக்கவும் 10 பில்லியன் ரூபா செலுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## பட்டிப்பொங்கலில் கோமாதா பவனி

பட்டிப்பொங்கல் விழாவும் கோமாதா உற்சவமும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.
கோபவனி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி மின்சார நிலைய வீதியால் பேருந்து நிலைய மேற்கு மருத்துவமனை வீதியூடாக ஆலயத்தை வந்தடையவுள்ளது. (ச)

## மன்னார்த்தீவில் காடுகள் அழிப்பு

### நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்து

**மன்னார், ஜன.15**
**மன்னார் தீவுப் பகுதிக்குள் விறகுக்காக பெருமளவான மரங்கள் அழிக்கப்படுவது தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. இந்தச் சட்டவிரோதச் செயற்பாட்டைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று மன்னார் பிரஜைகள் குழுத் தலைவர் அருட்பணி மாக்கஸ் அடிகளார் சுட்டிக்காட்டினார்.**

அண்மையில் நடைபெற்ற மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.
குறுகிய விஸ்தீரணம் கொண்ட மன்னார் தீவு, தற்போது மின்சாரக் காற்றாலை, கனியவள மணல் அகழ்வு உள்ளிட்டவற்றால் பாதிப்புக்குள்ளாகி வருகின்றது.
இந்தநிலையில் விறகுக்காக பச்சை மரங்கள் வெட்டப்பட்டு காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன.
எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீவிர கண்காணிப்பை மேற்கொண்டு காடழிப்பைத் தடுக்கவேண்டும் என அவர் வலியுறுத்தினார். (ச-60)

## ஹரக்கட்டா கூட்டாளிகள் கைது

கொழும்பு, ஜன.15
பிரபல பாதாள உலக நபரான நதுன் சிந்தக விக்ரமரத்ன என்றழைக்கப்படும் "ஹரக்கட்டா" வுடன் தொடர்பில் இருந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
இவர்கள் வெலிகம மற்றும் அதுருகிரிய பிரதேசத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

## ரெலிக்கொம் பங்குகள் பகிர்வு 3 நிறுவனங்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன.15
ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பங்குகளைப் பகிர்வது தொடர்பான கோரிக்கைகளை 3 நிறுவனங்கள் சமர்ப்பித்துள்ளன என்று அரச நிறுவன மறுசீரமைப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.
கோரிக்கையை முன்வைப்பதற்கான கால அவகாசம் கடந்த தினத்துடன் நிறைவடைந்துள்ள நிலையில், அரச நிறுவன மறுசீரமைப்புப் பிரிவு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது.
இது தொடர்பாக அமைச்சரவையும் குழுவொன்றை நியமித்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மருத்துவக் கண்காணிப்பில் பரீட்சை எழுதிய மாணவி

வடமராட்சி, ஜன.15
டெங்குத் தொற்றுக்குள்ளான மாணவி ஒருவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் நேற்று முன்தினம் தோற்றியுள்ளார். அதற்கான வசதிகள் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.
வடமராட்சியில் டெங்குத் தொற்றுக்குள்ளான மாணவர்கள் ஐவர் கடந்தவாரம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றவேண்டியவர். அவர் அம்புலன்ஸ் மூலம் பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு மருத்துவத் தாதி ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சைக்குத் தோற்றியுள்ளார்.
அதேவேளை, காய்ச்சல் ஏற்பட்டுத் தணிந்தாலும் அது டெங்குக் காய்ச்சலாக இருந்தால் அதன் பாதிப்புகள் பின்னர் மோசமடையலாம். அதனால் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றால் குறுகியகாலத்தில் அதிலிருந்து மீளமுடியும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (எ-100)

## இலங்கையில் கைதுகள் ஐ.நா. சபையும் கவலை

கொழும்பு, ஜன.15
இலங்கை எதிர்கொள்ளும் போதைப் பொருள் பிரச்சினைக்கு எதிராக அதிகாரிகள் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.
நாட்டின் போதைப்பொருள் பிரச்சினைக்கு சுகாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளுக்குப் பதில் கடுமையான பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்ட நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுப்பது தொடர்பாக ஐ.நா. அலுவலகம் கவலை வெளியிட்டுள்ளது.
கடந்த டிசெம்பர் 18ஆம் திகதிக்குப் பின்னர் 29 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் சித்திரவதை செய்யப்பட்டு, மோசமாக நடத்தப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது.
நீதிமன்ற அனுமதியில்லாமல் படையினர் சோதனைகளை மேற்கொண்டுள்ளனர்.
போதைப்பொருள் பாவனையாளர்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ளவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர் நூற்றுக்கணக்கானவர்களை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பியுள்ளனர் என்று ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## விஷம அழைப்புகளுக்கும் இனி விசேட நடவடிக்கை

கொழும்பு, ஜன.15
பொதுப் பாதுகாப்பு அமைச்சால் அறிவிக்கப்பட்ட 118 என்ற பொலிஸ் துரித இலக்கத்துக்கு வழங்கப்படும் தகவல்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.
தேசியப் பாதுகாப்புக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய பயங்கரவாத மற்றும் தீவிரவாதச் செயற்பாடுகளையும் இந்த இலக்கத்துக்கு வழங்கமுடியும். வழங்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பான விசாரணை சிறப்புக் குழுவின் கீழ் இடம்பெறும்.
அதேநேரம், போலியான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## பெரமுன உறுப்பினர்கள் ஐ.ம.சக்தியில் இல்லை

கொழும்பு, ஜன.15
ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைக்கும் வேலைத்திட்டத்தை கைவிட அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.
தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலர் இதற்குக் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.
பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இணைத்தால், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்திருந்தனர் என்று அரசியல் தரப்புத் தகவல்கள் கூறுகின்றன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளவியல் பாதிப்புள்ள மக்கள் சரியான தீர்மானத்தை எடுப்பார்களா?

## பொதுஜன பெரமுனவுக்கு சந்தேகம்

கொழும்பு, ஜன.15

**பொருளாதாரப் பாதிப்பால் நாட்டு மக்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசியலில் அவர்கள் சரியான தீர்மானம் எடுப்பார்களா என்ற அச்சம் உள்ளது. ஆனால், கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராக இருக்கின்றோம் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள தேசிய தேர்தல்களில் போட்டியிட கட்சி என்ற ரீதியில் உள்ளோம்.

ஆனால், பொருளாதாரப் பாதிப்பால் மக்கள் உளவியல் ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

மக்கள் எவ்வாறு அரசியல் தீர்மானத்தை எடுப்பார்கள் என்ற அச்சம் எமக்கு உண்டு.

ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் துறைமுகத்துக்குச் சென்றமை தற்போது பிரதான பேசு பொருளாகக் காணப்படுகிறது.

பொருளாதாரப் பாதிப்பு என்பதால் அழுது கொண்டிருக்க முடியாது. மகிழ்வுடன் இருக்க வேண்டும். துறைமுகதத்துக்குச் சென்றதால் நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன் - என்றார். (எ-இ)



# சஜித் ஆட்சி அமைத்தால் இலகு ரயில் திட்டம்!

கொழும்பு, ஜன.15

ராஜபக்ச அரசாங்கத்தில் எவ்வித அடிப்படைக் காரணிகளும் இன்றி இடைநிறுத்தப்பட்ட இலகு ரயில் திட்டம் தங்கள் ஆட்சியில் மீள ஆரம்பிக்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட ஜப்பானிய நிதியமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கிடையிலான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலகு ரயில் திட்டத்தை திடீரென இரத்துச் செய்ய ராஜபக்ச அரசாங்கம் எடுத்த தொலைநோக்குப் பார்வையற்ற தீர்மானத்துக்காகத் தனது வருத்தத்தைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது கட்சியின் கீழ் அமைக்கப்படும் அரசாங்கத்தில் இந்தத் திட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என ஜப்பான் நிதியமைச்சரிடம் உறுதியளித்தார். (எ-இ)




# வற் உயர்வால் சுற்றுலாவிகள் சிரமம்

கொழும்பு, ஜன.15

பெறுமதி சேர் வரி நடைமுறைப்படுத்தப்பட்டமையால் சுற்றுலாப் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சிகிரியா சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் சிகிரியாவை பார்வையிடுவதற்காக வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு 30 டொலர் அறவிடப்பட்டு வந்த நிலையில், தற்போது அந்த தொகை 36 டொலராக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் டொலரில் அனுமதிச் சீட்டுக்களை கொள்வனவு செய்யும் நிலைமை நடைமுறையில் உள்ளது. ஆயினும் மீதமுள்ள பணத்தை டொலரில் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சிகிரியாவுக்கு வராமல் வேறிடங்களுக்குச் செல்கின்றனர் என்று அந்தச் சங்கத்தின் தலைவர் சமன் மோரேமட தெரிவித்துள்ளார். (எ-இ)

# அழுத்தங்களுக்கு அடிபணிந்து யுக்திய நடவடிக்கை ஓயாது!

## டிரான் அலஸ் திட்டவட்டம்

கொழும்பு, ஜன.15

சர்வதேச, உள்நாட்டு அழுத்தங்களுக்கு அடிபணிந்து யுக்திய நடவடிக்கையை ஒருபோதும் கைவிடப்போவதில்லை என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளதார மேம்பாட்டுக்கு போதையொழிப்பு முக்கியமான விடயமாக இருக்கின்றது. இந்தச் செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

மனித உரிமைகள் உள்ளிட்ட வெவ்வேறு பெயர்களில் உள்நாட்டிலோ, சர்வதேசத்திலோ என் மீது அழுத்தங்கள் பிரயோகிப்பதற்கு முனைந்தால் அதற்கு அடிபணியப்போவதில்லை. நான் தற்போதுள்ள பதவியில் நீடிக்கும் வரையில் நிச்சயமாக போதைப்பொருளுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ச்சியாக முன்னெடுப்பேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஜே.வி.பி. யுடன் இணைய தயாராகும் வாசுதேவ!

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு எதிரான கூட்டணியை உருவாக்க மக்கள் விடுதலை முன்னணி முன்னின்று செயற்பட வேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

"மக்கள் தற்போது பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளே இதற்குக் காரணம். தற்போதைய சந்தர்ப்பத்தில் அதைத் தோற்கடிப்பதை விட வேறு அரசியல் எதுவுமில்லை. சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிராக முகாமில் அதிகளவான ஆதரவு மக்கள் விடுதலை முன்னணிக்கே உள்ளது. அதனால், மக்கள் சார்பான அரசியலை கட்டியெழுப்ப அந்தக் கட்சி முன்னின்று செயற்பட வேண்டும்" என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நாட்டை விற்றுவிட்டதாம் ரணில் – ராஜபக்ச ஜோடி!

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

கொழும்பு, ஜன.15

பௌத்த சமயத்தை அழிக்கும் பல்வேறு சக்திகள் தற்போது முன்னோக்கி வந்துள்ளன என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

டி.எஸ்.சேனாநாயக்க, டட்லி சேனாநாயக்க, பண்டாரநாயக்க, சிறிமாவோ ஆகிய தலைவர்களை தவிர நாட்டையும் மக்களையும் நேசித்த எந்தத் தலைவர்களும் இருக்கவில்லை. ஏனைய அனைவரும் சிறந்த வழியிலேயோ, கெட்டவழியிலேயோ பணத்தை மாத்திரமே சம்பாதித்தனர்.

இவர்களில் எவருக்கும் நாடு பற்றிய நேர்மையான எண்ணம் இருந்ததில்லை. தற்போது ரணில், ராஜபக்ச ஜோடி இணைந்து நாட்டை விற்பனை செய்ய தேவையான நடவடிக்கைகளை எடுத்துவிட்டனர். சஜித் என்ற நபருக்கு எப்போதும் நாட்டை ஆட்சி செய்ய முடியாது. அதேபோல் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் சந்திரிகாவின் ஆட்சி காலத்தில் வகித்த அமைச்சுப் பதவியை சரியாகச் செய்ய முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# நாடு வங்குரோத்து என அறிவிக்கப்படவில்லை

## நிதியமைச்சின் செயலாளர் விளக்கம்

கொழும்பு, ஜன.15

நாடு நிதி வங்குரோத்து அடைந்தது என்று அறிவிக்கப்படவில்லை என நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான நாடு வங்குரோத்து அடைந்தமைக்கான காரணத்தைக் கண்டறிவதற்காக நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழுவுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையில் நிதி வங்குரோத்து அடைந்ததாக அறிவிக்கப்படவில்லை. நாம் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவித் திட்டத்துக்குச் செல்லும்போதே, கடன் உதவித் திட்டத்துக்குச் செல்கின்றோம். அதனால் எமக்கு கடனைத் திருப்பிச் செலுத்த கால அவகாசம் வழங்க வேண்டும் என்றே கோரியிருந்தோம் என்று அவர் தெரிவித்தார். (எ-இ)

# பொது வேட்பாளராகவே களமிறங்குவார் ரணில்!

## ரவி கருணாநாயக்க கூறுகின்றார்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுவேட்பாளராகவே களமிறங்கவுள்ளார் என்று தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் ரவி கருணாநாயக்க, சஜித் பிரேமதாஸவும் அவருக்கு ஆதரவளிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல், அரசமைப்பின் பிரகாரம் நடைபெறவுள்ளது. அதில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை. ஒக்ரோபர் மாதத்துக்கு முன்னர் தேர்தல் நடத்தப்படலாம். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க அரசியல் கட்சிகள் சார்பற்ற பொதுவேட்பாளராகவே களமிறங்கவுள்ளார். அவருடைய அர்ப்பணிப்பான அரசியல் சேவை தொடர்வதன் ஊடாகவே நாட்டை மீண்டும் ஸ்திரநிலைக்கு கொண்டு வரமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



மண்ணில் 07.08.1991 விண்ணில் 12.01.2024

அமரர்
## யேசுதாஸ் அன்ரன் பிலிப்பின்தாஸ்
(அபிவிருத்தி உத்தியோகத்தர்)

எமது அலுவலக அபிவிருத்தி உத்தியோகத்தர் யே. அன்ரன் பிலிப்பின்தாஸ் அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

துயர்பகிர்வோர்...
பிரதேச செயலகம் புதுக்குடியிருப்பு.

(CS 27669)

# மரண அறிவித்தல்



## சீவரத்தினம் தங்கவேலு

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், இடைக்காட்டை வசிப்பிட மாகவும் கொண்ட சீவரத்தினம் தங்கவேலு (ஓய்வுநிலை கல்விசாரா பணியாளர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை கோப்பாய்) அவர்கள் (13.01.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் சரஸ்வதி தம்பதிகளின் மூத்த மகனும், பாலசிங்கம், மோகன், தவமணிதேவி, கேமலதா, ஜெகன் ஆகியோரின் அன்பு சகோதரனும், நாகலட்சுமி (ஆசிரியை இடைக்காடு மகா வித்தியாலயம்) அன்புத் துணைவரும், துவாரகி, பவீனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (16.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாமித்திடல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 711 2929

(CR 5559) S-1

# வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகரத்தில். சிவன்கோவிலுக்கு அருகில், செட்டித்தெருவில். பங்குக் கிணற்றுடனும். சுவாமிப் படம் வைத்துள்ள சிறு கோவிலுடனும் கூடிய 4 பரப்பும் 2.88 குளியில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்குண்டு. விலை பேசித்தீர்மானிக்கலாம்.

**பார்வையிடும் நேரம்:** தை மாதம் 16 ஆம், 17ஆம் திகதி முற்பகல் 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை.

**075 566 4422, 077 617 6623**

# Annamalian Sri Ragaventhirar Enterprises (Pvt) Ltd.

அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் திருமண கலாசார மண்டபத்தில் நடைபெற்ற திருமண வைபவமும் அதன் பின்பு நடைபெற்ற விருந்து உபசாரமும் முக்கியமாக பரிமாறப்பட்ட உணவு மிகவும் சுவையாகவும் ஏனைய வசதிகள் உலக தராதரத்துக்கு நிகராக இருந்ததை கண்டு மிக மகிழ்ச்சி அடைந்தோம். டாக்டர் விஜயவர்மன் டாக்டர் அபர்ணா.

திரும்ண வைபவங்கள். பூப்புனித நீராட்டு விழாக்கள். கிறிஸ்தவ பதிவுத்திருமணங்கள். முஸ்லீம் நிக்கா (திருமணங்கள்). அரங்கேற்றம். இலங்கை. இந்திய கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள். வியாபார ஸ்தாபனங்களின் கூட்டங்கள் (அரச. தனியார் நிறுவனங்களின் நிகழ்வுகள்) ஏனைய வைபவங்களையும் நடத்துவதற்கு நாடுங்கள்.

**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம்**
இல.542, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 1355

# கல்லால் தாக்கப்பட்டு கொலை


நெலுவ, தும்மல ஹேன பிர தேசத்தில் இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் கல்லால் தாக்கப் பட்டு ஒரு வர் உயிரிழந் துள்ளார். 32 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள் ளார்.

(எ-இ)

ஓம் விராட் விஸ்வ பிரமனே நமஹ

# மரண அறிவித்தல்

மலர்வு 01 . 10 . 1948



உதிர்வு 13 . 01 . 2024

## விநாசித்தம்பி சந்திரசேகரம் (வட்டி)

(வேல் சன்ஸ் உரிமையாளர், ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சந்திரசேகரம் அவர்கள் (13.01.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி துரையம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், மீராஜினி (பிரான்ஸ்), குருசாந்த் (பிரான்ஸ்), மிதுலா (கனடா), ஹலசப்பிரசாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ் (பிரான்ஸ்), சோபி (பிரான்ஸ்), ரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அதிரன் (பிரான்ஸ்), ஆதீசன் (கனடா), கதிர் (பிரான்ஸ்), கயல் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜபாக்கியம், மணியம்மா, உதயசந்திரன், குணசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் (பிரான்ஸ்) மற்றும் சிதம்பரநாதன் (ஜேர்மனி), யோகேஸ்வரி (லண்டன்), புஸ்பவதி (சுவிஸ்) ஆகியோரின் அத்தானும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மகன் - 075 760 9172 (யாழ்ப்பாணம்) (ஹலசம்)
மகன் - 0033767400637 (பிரான்ஸ்) (குருசாந்த்)
[illegible] - 0033651101319 (பிரான்ஸ்) (ரமேஸ்)
மருமகன் - 0012042911345 (கனடா) (ரவி)

தகவல்: குடும்பத்தினர்.

(CS 27668) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைத்திருநாளையொட்டி விளையாட்டுப்போட்டிகள்

தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு மாதகல் விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டுவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விநாய கர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் ஆண், பெண் இருபாலாருக்குமான முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தலையணைச் சண்டை, கிடுகு பின்னுதல் மற்றும் பல்வேறுபட்ட கிராமியமட்ட விளையாட்டுகள் இடம்பெறவுள்ளன. வெற்றிபெறுபவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-66)

**A/L Chemistry 2024 & 2025**

2024. 2025 Batch Tamil/ English
ஆசிரியரால் (B.Sc, MSC Chemistry) குழுவாகக் கற்பிக்கப்படும்.

**076 410 5838**



ஓம் சக்தி

**ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**

## மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2024

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம்
**2 ஆம் நாள் (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.**
**பூர்த்தி தினமாகிய 25.01.2024 வியாழக்கிழமை**
ஸ்ரீவசந்த நாகபுஸ்கரணி தீர்த்த தடாகத்தில்
**தீர்த்தம்** இடம்பெறும்.

**தினசரி காலை 9.00 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகும்**

**விசேட உற்சவ தினங்களில்**

- **கொடியேற்றம்**
  (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை - 9.00 மணி
- **வேட்டைத்திருவிழா**
  (22.01.2024) திங்கட்கிழமை காலை - 9.00 மணி
- **சப்பறத்திருவிழா**
  (23.01.2024) செவ்வாய்க்கிழமை காலை - 9.00 மணி
- **தேர்த்திருவிழா**
  (24.01.2024) புதன்கிழமை காலை - 9.00 மணி
- **தீர்த்தத்திருவிழா**
  (25.01.2024) வியாழக்கிழமை காலை - 9.00 மணி

"அன்னையின் திருவருள் பாரெங்கும் பொங்கி பொலிவதாக!"

**அருள்மிகு வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்**
**ஏழாலை தெற்கு, ஏழாலை.**

# திருமுறை ஓதலும் கந்தபுராணப் படிப்பும்

வட்டுக்கோட்டை, தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6 மணிக்கு பொங்கல் பூசையும் வழிபாடும் மாலை 4 மணிக்கு திருமுறை ஓதலும் இடம்பெறவுள்ளன. மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஷஷ்டி திதியில் கந்தபுராணப் படிப்பும் மாலை 4.30 மணிக்குப் பட்டிப்பொங்கல் பூசையும் இடம்பெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர். (ச)

# குருதிக்கொடை

*யாழ்ப்பாணம், ஜன. 15*

*தைப்பொங்கலை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் நடத்தும் குருதிக்கொடை முகாம் இன்று திங்கட்கி ழமை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை ஏழாலை தெற்கிலுள்ள தனியார் வர்த்தக நிலைய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (ம-66)*

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஜன.15

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையமும், டயானா விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் பொங்கல் விழாவும், பாரம்பரிய விளையாட்டுகள் மற்றும் கலை நிகழ்வுகளும் இன்று திங்கட்கிழமை பி.ப.3.30 மணியளவில் முற்போக்கு முன்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளன.

நாடகம், கவிதை, பட்டிமன்றம், நடனம் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-36)


## மோசடியில் அகப்படாதீர்கள்

யாழ்ப்பாணம், கல்வியங்காடு, டச்சுவீதி, GPS Lane அருகாமையில் 6 பரப்புக் காணி இரண்டு பரப்பாகப் பிரிக்கப் பட்ட நிலையில் விற்பனைக்குள்ளது என பத்திரிக்கைகளில் கடந்த சில நாட்களாக வந்த விளம்பரம் மோசடியாக செய்யப்பட்ட விளம்பரமாகும். குறித்த ஆதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் மீளாய்வு/128/23 எனும் வழக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் காணி/1320/ 2024 எனும் வழக்கு நிலுவையில் உள்ளன. இக்காணியை விற்க முயல்வோருக்கு குறித்த காணியில் எவ்வித உரித்தும் இல்லை என்பதனை உரிமையாளர்கள் அறியத்தரு கின்றனர்.

குறித்த மோசடி விற்பனையில் பங்குபற்றி காணி கொள்வனவு செய்வோருக்கெதிராகத் தலா 1 கோடி நட்டம் கோரி காணி உரிமையாளர்களால் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு: 075 325 4124**
**074 136 4103**

## மரண அறிவித்தல்



தோற்றம் 01 . 11 . 1945

மறைவு 13 . 01 . 2024

### காசிப்பிள்ளை நல்லதம்பி

(ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர் - கிளிநொச்சி. திருநெல்வேலி. சமாதான நீதவான்)

பலாலி கிழக்கைப் பிறப்பிடமாகவும். சுன்னாகம். நீராவியடியை (யாழ்ப்பாணம்) வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை நல்லதம்பி நேற்றுமுன்தினம் (13.01.2024) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை செல்லாச்சி தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும். காலஞ்சென்றவர்களான கந்தவனம் செல்லம்மா தம்பதியரின் மருமகனும். மகேஸ்வரியின் அன்புக் கணவரும். Dr.முகுந்தன் (யாழ். போதனா வைத்தியசாலை). ஜெயந்தன். Dr. நளாயினி (யாழ். போதனா வைத்தியசாலை). துஷ்யந்தன். வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும். Dr.பிருந்தா (யாழ். போதனா வைத்தியசாலை). கலைச்செல்வி. Dr.S.கிரிதரன் (சத்திரசிகிச்சை நிபுணர். JTH). கம்சாயினி. தர்மினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும். அக்சயன். அகீசன். ஜனுஜா. ஜஸ்வின். தனுஷ்கன். சுலக்ஷன். தனுசியா. துஷான். தருண். அம்ருதா ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்றவர்களான பாக்கியம். மூத்ததம்பி. நாகம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும். மகாலிங்கம். Dr.சிவஞானம். காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் கலாநிதி. சிவகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.01.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கடையிற் சுவாமி வீதி. நீராவியடியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:
**021 221 4608**

(cs.53525) (N.1)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 25 . 12 . 1935

மறைவு 12 . 01 . 2024

### தேவசகாயம் செபமணி

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தேவசகாயம் செபமணி கடந்த (12.01.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை தம்பையா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற தேவசகாயம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற அசுந்தா மற்றும் அன்ரன்ஜெபநேசன், யஸ்ரின் குணநேசன், யசிந்தா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜோசப் ஜோர்ஜ், சாந்தினி, சிவறூபா, செல்லத்துரை ஆகியோரின் பாசமிகு மாமியாரும், அழகரத்தினம், அரசமணி, காலஞ்சென்ற மனோன்மணி, காலஞ்சென்ற சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜொய்ஸ் நிர்மலா, ஜொனார்த்தன், யாமினி நிறஞ்சலா, டினேஸ், சிந்துயன், றொகான், சுரேன், வினோஜன், விதுஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யோசுவா, ஜோர்த்தானா, ஜெடேயா, ஜாத்தினியல் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (16.01.2024) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மல்லாகம் புதுமை மாதா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(cs 53524 (N-1)

தகவல்:
**குடும்பத்தினர்.**
**076 801 3264**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வருக!

**சின்ன எறும்புகளே வருக...**
**எமது குருவிகளே வருக...**
**இயற்கையின் படைப்பாளி, சூரிய பகவானே வருக...**
**வடக்கினை அலங்கரிக்கும் கோலத்தை சுவைத்திடுங்கள்...**
**எதிர்கால நற்சிந்தனைகளை அறுவடை செய்யும் முயற்சியில் நீங்களும் பங்குகொள்ளுங்கள்**

**சம்பத் வங்கியினால் “20” ஆவது குளமாக புனர்நிர்மாணிக்கப்பட்ட**
**வவுனியா கிடாச்சூரிக் குளத்தின் ஆரம்ப நிகழ்விற்கு,**
**தைப்பொங்கல் தினத்தன்று**
**சம்பத் வங்கி வருகை தரவுள்ளது.**

**290 விவசாயக் குடும்பங்களுக்கு 185 ஏக்கர் வயல்**
**நிலப்பரப்பினால் வாழ்வளிக்கும் “அபேம சம்பத்”**

அபேம சம்பத்
செழுமைமிகு தேசம்

இரு தசாப்தங்களாக தேசத்தின் குளங்களின் புனர்நிர்மாணப் பணிகளை பொறுப்புடன் ஆற்றிவருகின்றோம்.

www.sampath.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசிக்காத குடியேற்ற வீடுகளை வீடுகளற்றோருக்கு வழங்குக

## முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 15

முல்லைத்தீவில் குடும்பங்கள் வசிக்காது அழிவடையும் வீடுகளை, வீடுகளற்ற பயனாளிகளுக்கு வழங்குவதற்கு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தப் பகுதியில் மீள்குடியேற்றத்தின்போது சர்வதேச உதவி அமைப்புகளூடாகவும் இந்திய அரசினாலும் குடியமர்ந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டன.

ஆனால், வீடுகளைப் பெற்றுக்கொண்ட பல குடும்பங்கள் அந்த வீடுகளில் வசிக்காது அவற்றைஅழிவடையும்நிலையில்விட்டுள்ளன. இதனால் ஆள்களற்ற வீடுகளில் சட்டவிரோதச்செயற்பாடுகளும் கலாசாரப் பிறழ்வுகளும் தலைதூக்குகின்றன.

எனவே முல்லைத்தீவில் வீடுகளற்ற குடும்பங்களுக்கு இந்த வீடுகளைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ச-13)

# சஜித்தின் தாராளத்தால் கடுப்பாகிய பொன்சேகா

கொழும்பு, ஜன.15

ஆளுங்கட்சி பக்கம் இருந்து எதிரணி பக்கம் தாவும் அரசியல் வாதிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி அரசியல் தஞ்சம் வழங்கிவருவது தொடர்பில் அந்தக் கட்சியின் தவிசாளரான நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

அடுத்த தேர்தலை இலக்குவைத்து வரும் அனைவரையும் ஏற்றுக்கொள்வது ஏற்புடைய நடவடிக்கை அல்ல எனவும், இதனால் ஐக்கிய மக்கள் சக்திமீதும் மக்களுக்கு அதிருப்தி ஏற்படும் எனவும் பொன்சேகா சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஐக்கிய மக்கள் சக்திதான் தற்போது மாற்று சக்தியாகும். எமது கட்சியில் இணைபவர்களின் கடந்தகாலம் பற்றி மக்கள் விழிப்பாகவே இருக்கின்றனர். எமது கட்சி பக்கம் வருபவர்கள் தொடர்பில் விழிப்பாகவே இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் மக்கள் அரசியல் தலைவிதியை மாற்றி அமைப்பார்கள்" என்று அவர் கூறியுள்ளார். (எ-44)

முல்லைத்தீவு, ஜன. 15

ஜப்பான் ஆசான் ஆகிய கன்சி கெனிச்சி புக்காமிசு பங்கேற்பில் சர்வதேச நுட்பங்கள் அடங்கிய கராத்தே பயிற்சி கிளிநொச்சியில் மாகாண உள்ளக விளையாட்டு அரங்கில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

வடமாகாணத்தைச் சேர்ந்த 324 மாணவர்கள் இந்தப் பயிற்சியில் பங்கு கொண்டனர்.

கராத்தே கழக மாணவர்களின் ஜப்பான் கறுப்புப் பட்டிக்கான தரப்படுத்தல் பரீட்சையும் இதன்போது நடைபெற்றது. (ச-13)






# 'நஞ்சாகும் நிலம்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன.15

ஊடகவியலாளர் மு. தமிழ்ச்செல்வனின் "நஞ்சாகும் நிலம் சூழலியல் கட்டுரைகளின் தொகுப்பு" நூல் வெளியீடு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது.

நூலாசிரியரின் பெற்றோர் நூலை வெளியிட்டு வைக்க சமூக சேவையாளரும், தொழிலதிபருமான ந. சிவகுமார் பெற்றுக்கொண்டார். சிறப்புப் பிரதிகளும் வழங்கி வைக்கப்பட்டன. யாழ். பல்கலைகழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன் ஆகியோர் நூல் ஆய்வுரையை வழங்கினர் (ய)



# புத்தக வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.15

கலாபூஷணம் குடாநீரூரான் சிதம்பரப்பிள்ளை பசுபதியால் உரைசெய்யப்பட்ட பிள்ளையார் புராணம் மூலக்கதையும், பிள்ளையார் கதை புத்தக வெளியீட்டு விழாவும், துன்னாலை ஆயில் நின்றெல்லை விநாயகர் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகரசபை ஆணையாளர், கவிஞர் த. ஜெயசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு நூலை வெளியிட்டு வைத்தார். (ரி-100)






வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 10 மாணவர்களுக்கு முல்லைத்தீவில் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன. நல்லூர் றோட்டரிக் கழகம் இந்த சைக்கிள்களை வழங்கியுள்ளது. (எ-13)

# ஏர் நிலம் அமைப்பால் உலருணவுப் பொதிகள்

மன்னார், ஜன.15

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஏர் நிலம் அமைப்பால் உலருணவுப் பொதிகள் கையளிக்கப்பட்டன.

சுவிற்சர்லாந்தில் வசிக்கும் வீரகத்தி சிவராசாவின் நிதிப்பங்களிப்பில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள 73 குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகளே இதன்போது கையளிக்கப்பட்டன. (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பொங்கலோடு பிறக்குமா வழி?


**தை** பிறந்தால் வழி பிறக்கும் என்பது தமிழர்களின் நம்பிக்கை. நம்பிக்கையுடன் வாழ்க்கையை முன்னகர்த்த வழிசமைக்கும் பொங்கல் திருநாள் தமிழர்களின் வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த பெருநாளும்கூட. புத்துணர்ச்சியும் நம்பிக்கையும் தரும் இந்த நாளில் தமிழ் மக்கள் தமக்கு இந்தப் பொங்கலாவது அரசியல் விடிவைக் கொண்டுவராதா? என்ற ஏக்கத்தோடு தான் சூரியனுக்குப் பொங்கலிட்டுப் படைக்கின்றார்கள். இனப்பிரச்சினைக்கான தீர்வொன்றைத் தமிழ் மக்கள் வேண்டி நிற்கின்ற நிலையில் கடந்த ஆண்டுகள் தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தையே தந்து சென்றுள்ளன. இந்த நாட்டில் தமக்கான அரசியல் விடியல் தம்மைத்தாமே ஆளும் ஜனநாயக உரிமைகளுடன் வாழ்வதற்கான வாய்ப்பு எப்போது கிட்டும் என்ற எதிர்பார்ப்புடனேயே தைப்பொங்கல் உள்ளிட்ட எல்லாப் பண்டிகைகளையும் கொண்டாடிக் கடக்கின்றனர்.

இலங்கையில் தமிழ் மக்கள் சிறுபான்மையினர் என்பதால், அவர்கள் நாட்டின் இரண்டாம் தரக் குடிமக்களாகவே வாழவேண்டும் என்ற தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் வன்மம் பொருளாதார நெருக்கடியால் நாடு தள்ளாடிக்கொண்டிருக்கும் சமயத்திலும்கூட, தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் அனைத்துச் சந்தர்ப்பங்களையும் இந்த வன்மமே இல்லாமல் ஆக்கிக்கொண்டிருக்கின்றது.

நியாயமான - நீதியான அரசியல் தீர்வொன்றைத் தமிழ் மக்களுக்கு முன்வைக்காமல் தாங்கள் நினைப்பதைத் திணிக்கும் போக்கிலேயே இலங்கை அரசுகள் செயற்படுகின்றன. தற்போது ஆட்சியில் உள்ள ரணில் அரசும் அந்தப் போக்கிலேயே பயணிக்கின்றது என்பதையே அதன் செயற்பாடுகள் படம்போட்டுக் காட்டுகின்றன. சர்வதேசக் கடன்களையும், உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்காக மட்டும் தமிழ் மக்களின் மீது ரணில் அரசாங்கம் திடீர்க் கரிசனை கொண்டு, 'அடுத்த வருடத்துக்குள் தீர்வு காண்போம்'என்பதான வழக்கமான 'பேய்க்காட்டல்களை' வாக்குறுதிகளாக வழங்கிக் கொண்டிருக்கிறதே தவிர, உருப்படியான எதையும் இதுவரை செய்யவேயில்லை.

அரசாங்கத்தின் இந்த இழுத்தடிப்புகளையும், ஏமாற்றுதல்களையும் தட்டிக்கேட்டு, ரணில் அரசாங்கத்தின் கபடத்தனத்தை உலக அரங்கில் தோலுரிக்க வேண்டிய தமிழ் அரசியல் தலைமைகளோ, மக்கள் பிரச்சினையைத் தூக்கி ஓரத்தில் வைத்துவிட்டு, பதவிக்கதிரைக்காக ஒருவருக்கொருவர் மாறிமாறி குழிபறிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். அவ்வப்போது தமக்கும் மக்களின் பிரச்சினைகள் நினைவில் இருப்பதாகக் காட்டுவதற்குதைப்பொங்கலுக்குள்தீர்வுகிட்டும்,தீபாவளிக்குள் தீர்வு கிட்டும் என்று அந்தந்த நேரச் சமாளிப்புகளைச் செய்து கொள்வதோடு தமிழ் அரசியல்வாதிகள் அடங்கி விடுகின்றனர். போர் முடிந்து 14 வருடங்கள் கடந்த நிலையிலும், இனப்பிரச்சினைக்கான தீர்வு இன்னமும் அதே புள்ளியில் இருப்பது தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்ற எமது அரசியல் தலைமைகள் பயணிக்கும் பாதை சரியானதா? என்ற கேள்வியையும் எழுப்பாமலில்லை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க பொருளாதார நெருக்கடிகளும், புதியவரிகளும் அதனால் உயர்ந்து கொண்டே செல்லும் விலைவாசியும் மக்களின் மகிழ்ச்சியை அடியோடு குலைத்துவிட்டன. கடந்த வருடம் பொங்கலிடுவதற்காகச் செலவிட்ட தொகையைப் போல இரண்டு , மூன்று மடங்கு செலவிட்டே இம்முறை பொங்கல் பொருள்களைக் கொள்வனவு செய்யுமளவுக்கு விலைவாசி விண்ணை முட்டிக்கொண்டு நிற்கின்றது. ஆனால், மக்களின் வருமானமோ அதற்கு எதிர்த்திசையில், கீழ்நோக்கியே சென்றுகொண்டிருக்கிறது. அரசியல் தீர்வும் இல்லை, பொருளாதார விடிவும் இல்லை என்ற இக்கட்டுக்குள்தான் இன்றைய பொங்கலைத் தமிழர்கள் எதிர்கொண்டுள்ளனர். இந்தப் பொங்கலோடாவது, நம்மைப் பீடித்த அத்தனை துன்பங்களும் தொலைந்து, அடுத்த பொங்கலாவது மனமகிழ்வோடு வரட்டும் என்ற எதிர்பார்ப்பை மட்டுமே எல்லோரும் சுமந்து நிற்கிறோம்.




# ரணிலின் போக்கால் இலங்கைக்கு ஆபத்து

### எச்சரிக்கின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

**கொழும்பு, ஜன.15**

**ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவடிக்கைக்கு கப்பலை அனுப்பும் முடிவை எவரிடம் கேட்டு ஜனாதிபதி எடுத்தார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்.**

தமக்கு எதிராகச் செயற்படும் நாடுகளுக்கு எதிராக செயற்படுவோம் என ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அப்படியொரு பிரச்சினை இந்நாட்டுக்கு வந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்கவேண்டும். தன்னிச்சையான முறையிலேயே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார். இதன்மூலம் நாட்டின் எதிர்காலம் ஆபத்துக்குள் தள்ளப்பட்டுள்ளது.

தமக்கு எதிராக மனித உரிமை விவகாரங்களை எழுப்பும் நாடுகளை சமாளிக்கவே இவ்வாறு கப்பல் அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (எ-44)

## பயங்கரவாதத் தடைச் சட்டம் மீளப்பெறுமாறு போராட்டம்!

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு உடன் மீளப் பெற வேண்டும் என வலியுறுத்தி நேற்றுமுன்தினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. நாவலதிறந்தபல்கலைக்கழகமாணவர் ஒன்றியத்தால் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மக்களால் எதிர்க்கப்படும் கடுமையான சட்ட வரைவை அரசு நிறைவேற்ற முற்படுகின்றது. இதற்கு இடமளிக்க முடியாது. சட்டவரைவை அரசு உடன் வாபஸ் பெற வேண்டும் என மாணவர்கள் வலியுறுத்தினர். அதே வேளை, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை சவாலுக்குட்படுத்தி சில சிவில் அமைப்புகள், உயர்நீதி மன்றத்தில் நாளை வழக்கு தொடுக்கவுள்ளன. (எ-44)

## வெற்றிடமாகவுள்ள நீதியரசர் பதவிகள்

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களுக்கான நான்கு நீதியரசர் பதவிகளுக்கு நீண்டகாலமாக வெற்றிடம் காணப்படும் நிலையில், இதுவரை அந்தப் பதவிகளுக்கு தகுதியான எவரும் நியமிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்தப் பதவிகளுக்குத் தகுதியான நபர்களின் பெயர்களை ஜனாதிபதி அரசியலமைப்பு பேரவைக்கு பரிந்துரைக்க வேண்டும். எனினும் ஜனாதிபதி இதுவரை தனது பரிந்துரைகளை அரசியலமைப்பு பேரவைக்கு அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## கட்டணம் அதிகரிப்பு

கொழும்பு, ஜன.15

வருடாந்த மதுவரி அனுமதிப் பத்திரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு தெரிவித்துள்ளது. கடந்த 12ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்குவரும் வகையில் இந்தக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. (எ-இ)

## அரசுக்கு மட்டும் வாகன இறக்குமதி

வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கம் புதிய வர்த்தமானி ஒன்றை வெளியிட்டுள்ளது. அரசாங்கத்துக்கு அத்தியாவசியமான சில வாகனங்களை இறக்குமதி செய்வதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். இந்த வாகனங்கள் அனைத்தும் வெளிநாட்டு உதவியின் அடிப்படையிலேயே இந்த நாட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

16.01.2024

**செவ்வாய்க்கிழமை**

**தை 02**

சஷ்டி விரதம்

சுபநேரம் : 11.04 - 12.34

ராகுகாலம் : 03.34 - 05.04

**நாளொரு நல்வார்த்தை**

**மற்றவர்களிடம் அன்பு செலுத்துவதற்கு, நீங்கள் முதலில் உங்களை நேசிக்கவேண்டும்.**

\- லியோ பஸ்காக்லியா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் இருப்புக்காகவே பயங்கரவாத சட்ட எதிர்ப்பு

### நீதி அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, ஜன.15

ஜனநாயகம் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலேயே உத்தேச புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. அரசியல் இருப்புக்காகவே ஒரு சிலர் அதை எதிர்க்கின்றனர் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் கொடூரமானது என விமர்சித்தனர்.

அந்தச் சட்டத்தில் இருந்த சில பாரதூர விடயங்களை நீக்கிவிட்டு, ஜனநாயக அடிப்படையிலேயே உத்தேச சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், தமது அரசியல் இருப்புக்காக சில அரசியல் வாதிகளும், கட்சிகளில் அங்கம் வகிக்கும் சட்டத்தரணிகளும் அதனை விமர்சிக்கின்றனர்.

பயங்கரவாதம் என்றால் என்ன என்பதற்கு உரிய வரைவிலக்கணம் இருக்கவில்லை. அந்த வரைவிலக்கணம் உள்ளடக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் அமைப்பு கண்காணிக்க இடமளிக்கப்பட்டுள்ளது.

இப்படி பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இவை தொடர்பான தெளிவில்லாமல், சட்டம் பற்றியும் தெளிவில்லாதவர்களே விமர்சிக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-44)

# பொதுவேட்பாளர் ரணில்

கொழும்பு, ஜன.15

ரணில் விக்கிரமசிங்கதான் ஜனாதிபதி தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறங்குவார். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் வெளியாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான, முன்னாள் அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்தார்.


அவரால் மட்டுமே நாட்டை மீட்க முடியும். அடுத்த தேர்தலில் அவருக்கு ஆதரவு வழங்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பாகும் என்றும் அவர் கூறியுள்ளார். (ஏ-44)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூரியக்கதிரின் உதவியோடு
நெற்கதிரை புதுப்பானையில் பொங்க வைக்க உதவிடும்
அனைத்து இணைப்புகளோடு
SLT-MOBITEL உம் இணைகின்றது.

**இனிய தைத் திருநாள் வாழ்த்துகள்!**

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கையர் வாழ்வில் சுபீட்சம் மலரட்டும்!

## வடக்கு ஆளுநர் வாழ்த்து

இலங்கையர்களின் வாழ்வில் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் கொண்டுவரும் பண்டிகையாக இந்தப் பொங்கல் பண்டிகை அமையட்டும் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ்.

நெற்செய்கையில் ஈடுபடும் மக்கள் தமக்கு உதவிய இயற்கை தெய்வமாகிய சூரியனுக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்தும் முகமாக பொங்கல் பொங்கி வழிபாடுகளை மேற்கொள்வது மரபு. அந்தவகையில், எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த நெற்செய்கை பெரும் பங்காற்றுகிறது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இயற்கை அனர்த்தங்களாலும், ஏனைய சில செயற்பாடுகளாலும் நெற்செய்கையில் ஈடுபடுவோர் கடும் சவால்களை எதிர்நோக்குகின்றமை கவலைக்குரியதே. எனினும், நாட்டு மக்களின் பசியை போக்க தாம் எதிர்நோக்கும் சவால்களை முறியடித்து உரிய விளைச்சலை பெற்று விவசாயத் துறைக்கு உதவி புரியும் அனைவரையும் கௌரவித்து நினைவுகூரும் இந்த நாளை நன்றியுடன் கொண்டாடுவோம் - என்றுள்ளது. (ம-26-27)



# அறுவடைப்பண்டிகை விழாவில் அறச்சிந்தனைகள் பெருகட்டும்

தமிழ் மக்களின் அறுவடைப்பண்டிகை விழாவாக, உழவர் திருநாளாக, தைத்திருநாள் காணப்படுகிறது. அன்பினையும் பண்பினையும் நன்றிகளையும் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் அறச்சிந்தனைகளுடன் தர்மத்தினை போதித்து நிற்கிறது.

இத்தருணத்தில் அனைத்து மக்களும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் - நலமும் - பலமும் பெற்று இன்பகரமாக வாழ அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவாகமகலாநிதி சிவஸ்ரீ. கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள்.
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
சிவஸ்ரீ ச.சாந்தரூப குருக்கள்.
செயலாளர் இந்துக் குருமார் அமைப்பு.

# பிறக்கும் தை ஒளிபாய்ச்சட்டும்



தமிழ் மக்களின் வாழ்வில் இருள் அகன்று, நலமும் வளமும் வெளிச்சம் பாய்ச்சிடத் தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாளில் இறைவனைப் பிரார்த்தித்து, இப்பொங்கல் திருநாளில் மக்கள் அனைவரும் உடல் நலத்தையும், மகிழ்ச்சியையும், என்றும் குறையாத அன்பையும் பெற்று வளமோடும், நலமோடும் இன்புற்று வாழ வேண்டும் என உளமாற வாழ்த்துகின்றேன் என்று தெரிவித்துள்ளார் உதயன் குழுமத் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈ. சரவணபவன்.

அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. அடக்குமுறைக்குள்ளும், திட்டமிட்ட அபகரிப்புகளுக்குள்ளும் விடிவை நோக்கிக் காத்திருக்கும் தமிழ் மக்கள் வாழ்வில் பிறக்கும் தை மாற்றத்தை ஏற்படுத்தும் என்று நம்புவோம். புல்லின் மீதுள்ள பனித்துளி வெயில் பட்டதும் மறைவதைப்போல புதிதாகப் புலரும் தைத் திங்கள் மக்களின் துயரத்தையும் வருத்தத்தையும் நீக்கவேண்டும் என்று பிரார்த்திப்போம்.

தமிழ் மக்கள் வாழ்வில் நெருக்கடிகள் நீங்கி, இருள் அகன்று, வளமும் நலமும் வெளிச்சம் பாய்ச்சிடத் தமிழர் திருநாளை வரவேற்று அனைவருக்கும் பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தைப்பொங்கல் வாழ்த்து கவிதை



உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க வாழ்கவே!!
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே
ஒன்றை நூறு நெற்களாய்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்
பலனுங் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க வாழ்கவே!!!

த.நாராயணன்

# மங்கலம் பொங்கட்டும்

இன்று தைப்பொங்கல் நன்னாள். இது ஒரு தமிழர் திருநாள். மங்களமும் சுபீட்சமும் நிறைந்த நல்ல வாழ்க்கை மலரவேண்டும் என்றும், பொங்கல் நன்னாளில் ஈழம் வாழ் அனைத்து மக்களும் சுகமே வாழ எல்லாம் வல்ல இறையருள் கிட்ட வேண்டும் என்று உளமார வாழ்த்துகின்றோம்.

நெல் வயலிலே விளைச்சலும் உதவிசெய்த கதிரவனுக்கு நன்றி செலுத்தும் முகமாகப் பொங்கலிட்டு சுற்றஞ் சூழ உண்டு மகிழும் நன்னாள் இதுவாகும்.

எல்லோருக்கும் நல்லதே நடக்க வேண்டும் என்று சூரியனை வணங்கி சிந்தித்து மகிழ்கின்ற பொங்கல்தினத்தில் எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமானின் பொற் கமலபாதம் பணிந்து வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றோம்.

கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

# நெருக்கடிகள் நீங்கி இன்பம் பொங்கட்டும்

உலக இயக்கத்துக்கு ஆதாரமாக விளங்கும் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்து பொங்கலிட்டுப் பூசிக்கும் இந்நாளில் அனைவருக்கும் எமது தைப் பொங்கல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

உலகில் அனைவரும் வாழும் உரிமைபெற்றவர்கள் என்பதை என்றும் மறவாது வாழ்ந்தால் அதிகாரப்போட்டிகள் முடிவுக்குவந்துவிடும். நமக்குக் கிடைத்த வாய்ப்புகளும் வளங்களும் அனைவருக்கும் பொதுவானதென்பதை உணர்ந்து போட்டி பொறாமைகள் இல்லாத உலகை படைப்போமாக. உலகில் சாந்தி சமாதானம் அமைதி நிலவப் பிரார்த்திப்போமாக.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதோடு அனைவரும் சமவுரிமை பெற்று எதிர்காலத்தில் ஆனந்தமாக வாழ எல்லாம்வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திப்போமாக.

ஈசான சிவ சக்திகிரீவன்
தலைவர்.
இந்து சமயப் பேரவை.

# தைத் திருநாள்

வருடத்தில் முதலாவது மாதம் தை மாதம். தை மாதம் முதல் திகதியை மகர சங்கராந்தி என்பர். உத்தராயணம் ஆரம்பிக்கும் நாளும் அதுவே. தென்திசையிலிருந்து வடக்கு நோக்கி சூரியன் திரும்புவதை உத்தாரணம் குறிக்கும். தைமுதல் ஆனி ஈறாகவுள்ள ஆறு மாதங்களைக் கொண்ட உத்தராயணம் புண்ணிய காலம் என்றும் சுப கருமங்கள் மங்கள காரியங்கள் நிகழுகின்ற காலம் என்றும் கொள்ளப்படுகிறது.

பூமியிலே மழை அத்தியாவசியத் தேவை. நீரின்றி இருந்த உலகம் இயங்காது. மழையைத் தருவது சூரியன். வெப்பமும் ஒளியும் உயிர்ப்பும் சூரியனாலேயே அனைத்து ஜீவராசிகளுக்கும் வழங்கப்படுகிறது. இன்னார் இனியார் உயர்வு தாழ்வு என்னும் பேதங்களின்றி ஒரே விதமாக எல்லோரும் அவற்றை வழங்கும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தை முதல் நாளில் பொங்கல் விழா எடுத்து வருகின்றமை தமிழ் மக்களின் நயத்தக்க நாகரிகத்தையும் உயரிய பண்பாட்டையும் காட்டுகின்றது.

தைப் பொங்கல் இன்பபொங்கலாக. அறிவுப் பொங்கலாக இனிமைப் பொங்கலாக சுபமங்களப் பொங்கலாக அமைய வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போமாக. சாந்தியும் சமாதானமும் ஓங்கட்டும், தை பிறந்தால் வழிபிறக்கும் எனும் நம்பிக்கை நிஜமாகட்டும்.

மதுரகவி காரை எம்.பி. அருளானந்தம்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபஸ்தியார் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 15
வடமராட்சி கிழக்கு புல்லாவெளி புனித செபஸ்தியார் ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
ஆலய திருவிழா திருப்பலி எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. (ச)





# கலாசாலை பீடாதிபதிக்கு பணிநயப்பு கௌரவம்

யாழ்ப்பாணம், ஜன. 15
35 ஆண்டுகளாகச் சிறப்பான கல்விச் சேவையாற்றி ஓய்வுபெறவுள்ள யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சுப்பிரமணியம் பரமானந்தத்துக்கு பணி நயப்பு விழா கடந்த புதன்கிழமை கலாசாலையில் இடம்பெற்றது.
கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கலாசாலை விரிவுரையாளர்கள், கற்பித்தல் சாராப் பணியாளர்கள், ஆசிரிய மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-66)


வலிகாமம். வடக்கில் பொருளாதார பாதிப்பை எதிர்நோக்கிய மாற்றுத்திறனாளிகள் இருவருக்கு சமூக நலத்திட்ட உதவிகளை பிரதேச செயலாளர் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைத்தார். (ச-9)





# உதவி வழங்கல்


கிளிநொச்சி, ஜன. 15
கிளிநொச்சி, மணியங்குளத்தில் ஐம்பது குடும்பங்களுக்கு 'பூமணி அம்மா' அறக்கட்டளை ஊடாக உதவிகள் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிவைக்கப்பட்டுள்ளன. (ஒ-20)



# பிரியாவிடை

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரதேச செயலராகக் கடமையாற்றி, வடக்கு மாகாணசபைக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் சி.ச.கிருஷ்ணேந்திரனுக்கான பிரிவுபசார நிகழ்வு பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த புதன்கிழமை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (ச-9)

பளை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினரால் கடந்த செவ்வாய்க்கிழமை கிளாலிப் பிரதேசத்தில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-9)



மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாமில் தங்கியுள்ள மட்டக்களப்பு மாவட்டம் வெருகலைச் சேர்ந்த சுமார் 150 பேருக்கு தமிழ் மக்கள் கூட்டணியால் இரண்டு நாள்கள் மூன்று வேளையும் சமைத்த உணவு வழங்கப்பட்டது. (ஒ-125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோப்பாய் பிரதேச செயலராக இடமாற்றம் பெற்றுச் செல்லும் தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீக்கு பிரிவு பசார நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ச-9)



கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தால் பொருளாதாரம் நலிவுற்ற 60 வயதுக்கு மேற்பட்ட 20 முதியோருக்கு கட்டில்;மெத்தை வழங்கப்பட்டன (ச-75)




சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி யசோதா உதயகுமாருக்கு சேவை நலன் பாராட்டு நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது. (ச-66)

கிளிநொச்சி, திருவையாறு மகா வித்தியாலயத்தின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாமும் இலவச மருத்துவ முகாமும் அண்மையில் இடம்பெற்றன. பாடசாலையின் முதல்வர் கி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த மருத்துவ முகாமில் பாடசாலையின் பழைய மாணவர்களான தற்போது மருத்துவர்களாகக் கடமையாற்றும் மருத்துவர்கள் மருத்துவ சேவையை வழங்கினர். இதில் தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலர் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-113)





யாழ்ப்பாணம், கரவெட்டி பிரதேச செயலகத்தின் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நாளாந்த கடமைகளை மேற்கொள்வதில்சிக்கல்களை எதிர்கொள்ளும் மாற்றுத் திறனாளிகள் 28 பேருக்கான பொங்கல் பொருள்கள் அண்மையில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப் பட்டன. லண்டனில் வசிக்கும் திருமதி முத்துப்பிள்ளை தம்பிப்பிள்ளையின் ஞாபகார்த்தமான கனகம்மா அறக்கட்டளையின் ஏற்பாட்டிலேயே இவை வழங்கப்பட்டன. (எ-60)



துணுக்காய் பிரதேசசபையின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் துணுக்காய் பிரதேசசபையின் மாநாட்டு மண்டபத்தில்அண்மையில் இடம்பெற்றது. துணுக்காய் பிரதேசசபை செயலாளர் அ.பாலகிருபன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் அ.சஞ்சீவன் கலந்துகொண்டார்.

நிகழ்வில் மாணவர்களின் கலைநிகழ்வுகள், பரிசில்கள் வழங்கல், தென்னியங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்களின் 'நியத்தின் நிழல்' எனும் நாடகம் என்பன சிறப்புற இடம்பெற்றன. (ச)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் சிறப்பு ஆன்மிகச் சொற்பொழிவு அண்மையில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது. ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தென்னிந்தியத் தொலைக்காட்சிப் புகழ் செந்தமிழ்க் கலாநிதி பி.சுவாமிநாதன் பங்கேற்று 'கந்தன் மகிமை' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார். (ச-66)

முல்லைத்தீவு தண்ணீரூற்று பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு அண்மையில் தண்ணீரூற்று பரிமத்தியா முன்பள்ளி மண்டபத்தில் இடம் பெற்றது. (ச-13)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கஞ்சாவுடன் சென்றவர் வவுனியாவில் கைது!

வவுனியா, ஜன. 15

வவுனியா, புளியங்குளத்தில் ஒரு கிலோ 350 கிராம் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புளியங்குளம் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் புதுக்குடியிருப்பிலிருந்து பொல்காவலைக்கு செல்லும் மோட்டார் சைக்கிளொன்றை மறித்து சோதனையிட்டபோதே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

பொல்காவலையை சேர்ந்த 46 வயதுடையவரே கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபர் புளியங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-110)

# மலக்கழிவகற்றும் பணி உரியமுறையில் பேணுக



## வடக்கு ஆளுநர் பணிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

**யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் மலக்கழிவகற்றும் பணிகள் உரியமுறையில் பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண ஆளுநர் பணித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் மலக்கழிவகற்றலை உரியவாறு மேற்கொள்வதில்லை. அத்துடன் சில பகுதிகளில் பொதுமக்கள் குடியிருப்புகளுக்கு அண்மையில் அவை கொட்டப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன என்று ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முறைப்பாடு முன்வைக்கப்பட்டது

இதன்போது ஆளுநர், மலக்கழிவு அகற்றும் பவுஸர்களை ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தினூடாக கண்காணிக்கவேண்டும். மலக்கழிவகற்றும் செயற்பாடுகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் மாகாண சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட வேண்டும். இந்தச்செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படும் பவுஸர்களில், நிறுவனத்தின் பெயர், பதிவுவிவரங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் காட்சிப்படுத்தப்பட வேண்டும், அவர்களுக்கான ஒழுங்கு விதிகளை உள்ளூராட்சி நிறுவனங்கள் அறிவிக்கவேண்டும். அத்துடன் பவுஸர்களை போக்குவரத்துப் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் கண்காணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் துறைசார் அதிகாரிகளுக்கு ஆளுநர் அறிவுறுத்தினார். இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சிமன்றத் திணைக்கள ஆணையாளர், யாழ். மாநகரசபை ஆணையாளர், ஏனைய திணைக்களங்களின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-26,125)

# கந்தகாடு மறுவாழ்வு நிலையநிர்வாகத்தை மாற்றத் தீர்மானம்

கொழும்பு, ஜன.15

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத் தில் தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்றுவரும் நிலையில் நிர்வாகத்தை மாற்றியமைப்பதற்கு நீதி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொலநறுவை, வெலிகந்த கந்த காடு புனர்வாழ்வு முகாமில் உள்ள கைதிகள் குழுக்களுக்கி டையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலுக்கு, மதிய உணவு தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினையே காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் 26 கைதிகள் காயம் அடைந்துள்ளனர் என்றும் மூவர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. அத்துடன் 96 கைதிகள் தப்பியோடியுள்ளனர். இந்தநிலையில் அங்குள்ள நிர்வாகத்தை மாற்றுவது தொடர்பாக நீதியமைச்சர் ஆராய்ந்துள்ளார் என்றும், இதுதொடர்பில் அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-44)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தைப்பொங்கல் அபிஷேகம்

யாழ்ப்பாணம் ஜன.15

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு உரும்பிராய் காளி அம்பாள் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு அபிஷேகமும் பூசை வழிபாடுகளும் நடைபெறும். (ய-66)

## எங்கும் இன்பம் பொங்கட்டும்

தமிழர்தம் கலை, கலாசாரத்தை எடுத்தியம்பும் தைத் திருநாள் கொண்டாடும் அனைத்து தமிழ் மக்களுக்கும் தைத் திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக என்று தெரிவித்துள்ளார் வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர்.

நம்முடைய மூதாதையர்கள் இயற்கையை கடவுளாக வழிபட்டனர்.

ஜீவனோபாயமான வேளாண்மைக்கு நன்றி செலுத்தும் வகையில் சூரிய பகவானுக்கு பொங்கல் விழாவும், மறுநாள் பசுக்களுக்குப் பொங்கலிட்டு வணங்கும் பட்டிப்பொங்கலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

மக்கள் மனைகளிலும், மனங்களிலும் பொங்கல் இனிப்புப்போல ஆனந்தம் பொங்கி வளர தாசிந்தா மணல் அன்னை ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருவடிகளைத் தொழுது நல் ஆசிகளையும், வாழ்த்துக்களையும் கூருகின்றோம் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.






## சு ட்சமும் மகிழ்ச்சியும் நிறையட்டும்

### ஜனாதிபதி ரணில் வாழ்த்து

கொழு ஜன.15

தைப்பெ கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பை போதிக்கிறது.

அதற் நாட்டின் எதிர்காலத்துக்கான எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய ஒருதாய் மக்களாக முன்னேற் அடைய வேண்டும் என அனை திலும் கேட்டுக்கொள்ளும் அதே தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமு மகிழ்ச்சியும் நிறைந்த தைப் பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது.

அந்த அனைத்துப் பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசீர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறோம் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மற்றவர்களை நம்பி எந்த பொறுப்புகளையும் ஒப்படைக்கவேண்டாம். கனிவாகப் பழகுங்கள். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள். கூடுதலாக இலாபம் கிடைக்கும். சிரமங்கள் அறவே நீங்கும்.

**இடபம்:** உங்களுடைய பலம் பலவீனத்தை உணர்வீர்கள். கல்யாணப்பேச்சு வெற்றியடையும். நண்பர்கள் தேடி வருவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சில பொறுப்புகளை ஒப்படைப்பார். திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக்கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**சிம்மம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து செல்லும். புது அனுபவம் உண்டாகும். புதுவேலை கிடைக்கும்.

**கன்னி:** கடந்த இரண்டு நாள்களாக இருந்த அலைச்சல், பதற்றம், கோபம் யாவும் நீங்கி குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வியாபாரத்தில் புது முதலீடு செய்வீர்கள்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்றுமுறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண்கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** ராசிக்குள் சந்திரன் செல்வதால் வேலைச்சுமை இருந்து கொண்டே இருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளைத் தவிர்ப்பீர்கள். ஒத்துழைப்பின்மையால் இலாபம் குறையும்.

**தனுசு:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளுங்கள். உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சிகள் செய்வீர்கள்.

**மகரம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். புகழ் கௌரவம் கூடும் நாள். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**கும்பம்:** அனுபவப்பூர்வமாகவும் அறிவுப் பூர்வமாகவும் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் நீங்கும். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயற்படுவார்கள். மற்றவர்கள் பயனடைவார்கள்.

**மீனம்:** மனப்போர் நீங்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். பாதியில் நின்ற வேலைகள் முடியும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும்.



# மர்மப்பொருளால் பரபரப்பு

யாழ்ப்பாணம், ஜன. 15

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை பகுதியில் மர்மப் பொருள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கரையொதுங்கியுள்ளது.

புத்தபெருமான் அமர்ந்திருக்கக் கூடிய தேர் மிதப்புகள் உட்படப் பல்வேறு பொருள்கள் அண்மைக்காலமாக கரையொதுங்குவது குறிப்பிடத்தக் கது. (ரி-27)

**குளிரூட்டி தேவை**

**வீட்டுப்பாவனைக்கு உகந்த , நல்ல நிலையில் உள்ள குளிரூட்டிகள் (deep freezer) உடன் தேவை.**

**தொடர்புக்கு: 077 120 9998**

# உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்



*சார்ள்ஸ் எம்.பி. ஆதங்கம்*

யாழ்ப்பாணம், ஜன.15

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் மனநிலையைப் புரிந்து அவர்களின் குறைந்தபட்ச கோரிக்கையையாவது நிறைவேற்ற அரசாங்கம் முன்வரவேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கணவர் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டு 16 ஆண்டுகள் கடந்த நிலையில் கணவருக்கு என்ன நடந்தது என்று தெரியாது இரண்டு பிள்ளைகளுடன் போராடி வருபவரே கைதுசெய்யப் பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட வவுனியா காணாமலாக்கப்பட்டோர் சங்கத் தலைவி ஜெனிற்றா.

நாட்டு மக்கள் ஜனாதிபதியிடம் தானே தமக்கானவற்றைக்கோர முடியும். எனவே காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் குறைந்தபட்ச கோரிக்கையாவது நிறைவேற்ற அரசாங்கம் முன்வர வேண்டும் - என்றார். (ச-125)

# பெரும்போக அறுவடை கிளிநொச்சியில் வீழ்ச்சி

## விவசாயிகள் கவலை

கிளிநொச்சி, ஜன.15

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் போக நெற்செய்கையின் அறுவடை பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்தால் அறுவடைக் கூலியே கிடைக்கப்பெறும் என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது ஒரு மூடை நெல் 7 ஆயிரம் ரூபாவுக்கும் சிவப்பு இன நெல் 5ஆயிரத்து 500 ரூபாவுக்கும் தனியாரால் கொள்வனவு செய்யப்படுகிறது.

இம்முறை நோய்த்தாக்கங்கள், கால நிலை மாற்றம், வெள்ளஇடர் பேரழிவு உள்ளிட்டவற்றால் பெரும்போக அறுவடை பெரும் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது.

உரிய அதிகாரிகள் எமது வாழ்வாதார இழப்புக்கு இழப்பீடுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். (ச-113)

# மரண அறிவித்தல்



**தவமணி சிவஞானம்**

அருளானை, அம்பனை பன்னாலை, தெல்லிப்பழையைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி சிவஞானம் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியை) அவர்கள் நேற்று (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கனகராயர் (சின்னத்தம்பி) தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானம் (ஓவசியர்) அவர்களின் அன்பு மனைவியும், செந்தூரனின் (கோபி) (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி) பாசமிகு தாயாரும், வட்சலாகுமாரியின் (ஆசிரியை, யா/மத்திய கல்லூரி) பாசமிகு மாமியாரும், கபிலாசினி, உதிஸ்ரன், விதுர்ஷிகா, பிரணாத், கேயினா, லஷானன், கிஷானன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பாலசுப்பிரமணியம் (ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), காலஞ்சென்ற சிவபாலன் (கணக்காளர் C.T.B) மற்றும் புஸ்பராணி (ஓய்வு நிலை ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பரமேஸ்வரியின் அன்பு சம்பந்தியும், செல்வராணி, பாலசுப்பிரமணியம், காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் சிவராசா (தொட்டிலடி, சங்கானை) ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிருந்தாபன், பார்த்தீபன், வைகுந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சயந்தன், ஜெயந்தன், மீனாட்சி, கம்ஷா, துசிபா ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2024) திங்கட்கிழமை பி.ப 12.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 02.00 மணியளவில் கீரிமலை செம்மண் வாய்க்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அம்பனைச்சந்தி, பன்னாலை, தெல்லிப்பழை.**

**தகவல்: குடும்பத்தினர். 077 900 4003**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# லசந்த, வசிம் தாஜுதீனை கொன்றவர்களைத் தெரியும்!

## கூறுகின்றார் மேர்வின் சில்வா

கொழும்பு, ஜன. 15
லசந்த விக்கிரமதுங்க, வசிம் தாஜுதீனை கொலைசெய்தவர்கள் யாரென்று தெரியும் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
கொலை செய்யப்பட்டவேளை ராஜபக்ச அரசாங்கத்தில் அமைச்சராகப் பணியாற்றிய மேர்வின் சில்வா, உரிய நேரத்தில் இந்தக் கொலைகளுக்கு யார் காரணம் என்பதை அம்பலப்படுத்துவேன் என்றும் தெரிவித்துள்ளார்.
சிரச தொலைக்காட்சி மீதான தாக்குதலுக்கு யார் காரணம் என்பதும் எனக்குத் தெரியும் என மேர்வின் சில்வா மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

# குளத்தில் மூழ்கி மாணவர்கள் பலி!

கொழும்பு, ஜன. 15
களுத்துறை, களுகங்கையில் நீராடச் சென்ற மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். 16 வயதுடைய இரு மாணவிகளும், 15 வயதுடைய ஒரு மாணவனுமே இவ்வாறு உயிரிழந்தவர்களாவர்.
மாணவியொருவருடைய தாயாரின் பிறந்தநாளைக் கொண்டாடச் சென்ற இடத்தில் இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளது. களுத்துறை, பன்வில மற்றும் தொடங்கொட பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம)

### சிறுபான்மையினர்...

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியப் பணிப்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
இலங்கையில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் நடத்தும் போராட்டத்துக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. புதிய நிகழ்நிலைக் காப்புச்சட்டம் பொலிஸாருக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்குகின்றது.
பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி அதற்குப் பதிலாக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவரப்போவதாக ஜனாதிபதி கூறுகின்றார். இந்தப் புதிய சட்டம் அதிகாரிகளுக்கு கூடுதலான அதிகாரத்தை வழங்குகின்றது. சிறுபான்மை மக்களின் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் எடுத்து வருகிறது. ஜனநாயகத்தின் குரல்வளையை நசுக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது.
ஊழல் நிர்வாகம் காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு சிரமப்படுகின்றனர். 17 வீதமான மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாடு இவ்வாறான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், பொருளாதாரத்தை மேம்படுத்துவதை விடுத்து மக்களை நெருக்குவதையே அரசாங்கம் தன் முதன்மை இலக்காகக் கொண்டிருக்கின்றது - என்றுள்ளது. (அ-ம-6)

### இப்போது...

களைத் தெரிந்தெடுக்க வேண்டும். இப்போதில்லாவிடில் இனி எப்போதுமில்லை என்று ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.
கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பரப்புரைக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசியலில், பொருளாதாரத்தில் மற்றும் மனித வாழ்க்கையில் மாத்திரம் நெருக்கடி இருப்பதில்லை. மக்களின் சிந்தனையிலும் அவ்வாறுதான் இருக்கிறது. அதனால்தான் மக்கள் தவிர்க்கப்பட வேண்டியவர்களைத் தலைவர்களாகத் தெரிந்ததெடுத்து நாடாளுமன்றம் அனுப்புகின்றனர்.
நாம் சரியாக அவதானித்தால் கடந்த நாடாளுமன்றத்துக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் யார் என்பது புலப்படும். குருநாகலில் ஜோன்ஸ்டன், கண்டியில் மஹிந்தானந்த, இரத்தினபுரியில் சொக்கா மல்லி, களுத்துறையில் ரோஹித அபேகுணவர்த்தன, அதைப்போல, கம்பஹாவில் பிரசன்ன ரணதுங்க, அநுராதபுரத்தில் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.
இவர்கள் பலவந்தமாக நாடாளுமன்றத்துக்குள் நுழைந்தவர்கள் அல்லர். நாட்டு மக்களின் வாக்குகளாலேயே இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டார்கள். எனவே, பொருளாதாரத்தில் மாத்திரமா சீரழிவு இருக்கிறது? மக்களின் வாக்குகளிலும் தான்.
எமது நாட்டில் குற்றச் செயல்கள் அதிகரித்துவிட்டன. மனித சிந்தனைகள் சீரழிந்திருக்கின்றன. எனவே, எம் கண்ணெதிரே இருப்பது ஓர் அழிவடைந்த தேசமாகும். நாம் ஒரு தீர்க்கமான திருப்புமுனைக்கு வந்துள்ளோம். இந்த ஆட்சியாளர்களால் இன்று நாட்டில் அரிசி, எரிபொருள் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு தோன்றியுள்ளது. கடன் செலுத்தமுடியாத நாடாக மாறியிருக்கிறோம். வாழ முடியாத ஒரு நாடாக இலங்கை மாற்றப்பட்டுள்ளது. சுடுகாட்டை நோக்கிப் பயணப்படும் இந்த நிலையிலிருந்து மாறி நேரிய வழியில் பயணப்படவேண்டுமாயின் அது மக்களின் கைகளிலேயே உள்ளது. இப்போது இல்லாவிடில் இனி எப்போதும் இலங்கையை காப்பாற்றமுடியாது - என்றார். (அ-ம)

### புதிய...

வர்த்தகர்களும், வர்த்தகர்களும் சர்வதேச நாணய நிதியத்திடம் தெரிவித்தார்.
இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தனர். வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸின் அலுவலகத்தில் அவர்கள் சிறப்புக் கலந்துரையாடல்களிலும் ஈடுபட்டனர். ஆளுநரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள், வர்த்தகர்கள், சிறுவர்த்தகர்கள் எனப் பல தரப்பினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.
இதன்போது, பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள தமக்கு, நாணய நிதியத்தின் நிபந்தனைகள் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்று வணிகர்கள் சுட்டிக்காட்டினார்கள். வங்கிகளில் கடன்களைப் பெறுவதிலும் தடங்கல்கள் ஏற்பட்டுள்ளதுடன், வங்கி வட்டி வீதங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் தங்களின் வர்த்தகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் சிரமங்கள் உள்ளன என்றும் அவர்கள் நாணயநிதியத்தின் பிரதிநிதிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
இதன்போது, இலங்கையில் வரி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் மக்கள் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளமையை நாம் அறிந்துள்ளோம். ஆனால், கடந்தகால பொருளாதாரக் கொள்கைகளால் ஏற்பட்ட தவறுகளில் இருந்து மீட்சியடைவதற்கு குறுப்பிட்ட காலப்பகுதி வரை இறுக்கமான கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டியது அவசியமானது என்று நாணய நிதியத்தின் சிரேஷ்ட பிரதம அதிகாரி பீற்றர் ப்ரூர் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், உட்கட்டமைப்பு வசதிகள், காலநிலை மாற்றம், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான இழப்பீடுகளை வழங்குவதில் காணப்படும் சிக்கல்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து வடமாகாண ஆளுநர், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்குத் தெளிவுபடுத்தினார். (அ-ம-26)

### யானைதாக்கி...

தாக்கியுள்ளது. இதன்போது படுகாயங்களுக்கு உள்ளான நபர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். மற்றையநபர் தப்பியோடியுள்ளார். புளியங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-110)

### பெப்ரவரி...

பரீட்சை பெப்ரவரி மாதம் முதலாம் திகதியன்று நடத்தப்படவுள்ளது.
பரீட்சைக்கான விவசாய விஞ்ஞான வினாத்தாள் பரீட்சைக்கு முன்னரே மோசடியாக வெளியானதையடுத்து பரீட்சை பிற்போடப்பட்டது. இதையடுத்தே மாற்றப்பட்ட வினாக்களுடன் இந்தப் பரீட்சை பெப்ரவரி மாதம் முதலாம் திகதி இடம்பெறவுள்ளது. (அ-ம)

### மின்கட்டண...

கின்றது - என்று நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் காமினி லொக்குகே தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
மின்கட்டணத் திருத்தம் தொடர்பான யோசனையை மின்சாரசபை, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் நேற்று சனிக்கிழமை (நேற்றுமுன்தினம்) முன்வைத்துள்ளது. எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் 3.34 சதவீதத்தால் மின்கட்டணத்தைக் குறைப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மின்சார சபை கடந்த ஆண்டு மாத்திரம் 61 பில்லியன் ரூபா மேலதிக வருமானத்தைப் பெற்றுள்ளது. ஆகவே உண்மையான கணிப்புகளுக்கு அமைய மின்கட்டணத்தை 15 வீதத்தால் குறைக்க முடியும். மின்கட்டணத்தை 300 வீதத்தால் உயர்த்திவிட்டு 3.34 வீதத்தால் கட்டணக் குறைப்பை மேற்கொள்வதென்பது நகைப்புக்குரியது. மின்சாரசபையின் நோக்கத்துக்கு அமைய பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு செயற்படுமாக இருந்தால் ஆணைக்குழுவைக் கலைத்து பொறுப்புகளை மின்சார சபைக்கே வழங்கலாம். இன்னும் 8 மாத காலத்தில் அரசியல் மாற்றம் ஏற்படும் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும் - என்றார். (அ-ம)

### கைக்குண்டுடன்...

திருட்டுக் குற்றச்சாட்டொன்றில் தேடப்பட்டுவந்த நபர், நாதோலை பகுதியிலுள்ள தனது வீட்டில் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் அந்த வீட்டைச் சுற்றிவளைத்து சந்தேகநபரைக் கைதுசெய்தனர். அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் கத்தி ஒன்றும் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-125)

### கால்வாய்க்குள்...

அனுப்பப்பட்டது. இளைஞர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கால்வாய்க்குள் வீழ்ந்ததால் இந்த உயிரிழப்புகள் சம்பவித்திருக்கலாம் என்று பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-113)

### மாடுகளுக்கு...

ஏற்படுத்தி, அவற்றை உணவு உண்ண முடியாமல் உயிரிழக்கச்செய்யும் அளவுக்கு ஆக்கிரமிப்பாளர்களின் அராஜகம் அதிகரித்துள்ளது. இதைவிட சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் பல பசுக்களும் காளைகளும் கொல்லப்படும் நிலையில் இந்த அக்கிரமங்களுக்கு நீதியோரியே, ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நாளையதினம் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ம-125-26)

### வினாத்தாள்...

அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண் வேலையாள் தேவை

யாழ்.இந்துக்கல்லூரி வீதியில் அமைந்துள்ள வீட்டில் உள்ள வயோதிபப்பெண்ணிற்கு துணையாகவும், சமைத்து கொடுப்பதற்கும் தங்கி நிற்கக்கூடிய பெண் வேலையாள் தேவை.

சம்பளம் - 35000 இற்கு மேல் வழங்கப்படும்
வயதெல்லை - 25 - 50 இற்குட்பட்டவர்கள்

தொடர்பு: 076 041 0447

(cs.535241(N.I.)

## வாடகைக்குத் தேவை

கம்பனி ஒன்றுக்கு தங்குமிட விடுதி நடத்தக்கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. கச்சேரியடி, கோவில் வீதி, றக்கா வீதி, சுண்டுக்குளி

தொடர்பு: 077 056 9256
075 384 9090
077 371 3415


# அகிலத்திருநாயகிக்கு ஜனாதிபதி பாராட்டு



யாழ்ப்பாணம், ஜன. 15

பிலிப்பைன்ஸில் நடைபெற்ற 'மூத்தோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப்' போட்டியில் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் வென்ற அகிலத் திருநாயகியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேரில் அழைத்துப் பாராட்டிக் கௌரவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தில் விளையாட்டுத் துறை மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்களுக்கு ஆதரவையும், ஆலோசனைகளையும் வழங்குமாறும் ஜனாதிபதி தெரிவித்தார். (ச-இ)

# சந்நிதி ஆச்சிரம பேரிடர் உதவிகள்

வவுனியா, ஜன.15

யாழ்ப்பாணம், வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு, வவுனியாவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 123 குடும்பங்களுக்கு 6 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட மாமூலை பிரிவில் 52 குடும்பங்களுக்கும், வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட கோவில்புளியங்குளம் பிரிவில் 35 குடும்பங்களுக்கும், கணேசபுரம் பிரிவில் 36 குடும்பங்களுக்குமே இந்த உலர் உணவு பொதிகள் கையளிக்கப்பட்டன.

இதனை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரில் சென்று கையளித்தார். (ச-13)


## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் உள்ள பிரபல புடைவையகத்திற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 077 3515 980, 077 5632 734

## வேலையாட்கள் தேவை

உணவகம் ஒன்றிற்கு கொத்து, றைஸ், நாசி போட தெரிந்தவர்கள் தேவை. உணவு பரிமாறுபவர்கள் தேவை. (ஆண், பெண்)

தொடர்புகளுக்கு: 077 2030 625

## தாதி தேவை



வயோதிபத் தாயொருவரை வீட்டில் வைத்துப் பராமரிப்பதில் அனுபவமுடைய, ஓய்வுபெற்ற தாதியொருவர் தேவை.

உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :- 077 120 9998


# மரண அறிவித்தல்

மலர்வு 20 - 11 - 1937



உதிர்வு 14 - 01 - 2024

## சுப்பிரமணியம் விசாலாட்சி

யாழ். மயிலிட்டி வடக்கு, யப்பையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை வடக்கு, மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விசாலாட்சி அவர்கள் நேற்று (14.01.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு சுப்பிரமணியம் (திருநெல்வேலி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கனகரத்தினம் (ஓய்வு நிலை அதிபர் - மண்டைதீவு, புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தனபாலசிங்கம் (குணம் அன் சன்ஸ் - நெல்லியடி), கமலேஸ்வரி (தேவி), காலஞ்சென்ற சரோஜினி மற்றும் புஸ்பலதா (லதா), கனகாம்பிகை (பிரான்ஸ்), காலஞ்சென்ற வரதலிங்கம் மற்றும் துரைரத்தினம் (அதிபர, யா/சிந்மய பாரதி வித்தியாலயம்), சுவேந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவநாயகி (ஓய்வு நிலை ஆசிரியர்) , இராகேஸ்வரி, இராசேந்திரம், சிவானந்தம் (AT Travels), பாலேந்திரன், ரவீந்திரன், தயாளினி, நிஷாந்தினி (ஆசிரியர், யா/இந்துக் கல்லூரி), அனுஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோன்மணி, காலஞ்சென்றவர்களான இராசம்மா, சின்னத்தங்கம், கந்தசாமி (ஓய்வு நிலை லிகிதர் - மயிலிட்டி), நாகபூசணி மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தம்பிராசா, தர்மலிங்கம் மற்றும் கணபதிப்பிள்ளை மற்றும், தெய்வேந்திரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சரண்யா (ஆசிரியர்), ஷம்யுத்தா, துவாரகா (ஆசிரியர்), வாரணன், சரண்ஜன், ஜனனன் (அவுஸ்திரேலியா), சாம்பவன், தயாபரி, வராகன், உஷாயினி (பிரான்ஸ்), சுஜந்தன், கோகுலராஜ், அபிஷாலினி (பிரான்ஸ்), துஷாலினி (லண்டன்), அபிலாஷ் (சுவிஸ்), மனுதர்ஷன் (நீர்கொழும்பு), லோசனன், மிதுனராஜ், பிரிதிவி (பிரான்ஸ்), வர்ஷன் (பிரான்ஸ்), பைரவி (பிரான்ஸ்), தீபிகா (லண்டன்), பாணுஷன் (லண்டன்), சண்முகப்பிரியன், பவித்திரன், விருண் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அக்ஷயா, அக்ஷயன், அத்விகா, அயுஸ்மன், அஸ்விகா, சதாக்ஷி ரோசினி, நவீன், சாத்வி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.01.2024) திங்கட்கிழமை பி.ப 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கன்னித்தோட்டம்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 535291) S-1

# காணி போலி வெளிப்படுத்தல் உறுதி மோசடி

இல.741, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை தேவராஜா ஆகிய எனக்கு டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள நிலப்பரப்பு 113 ஆதனமானது பரம்பரை வழி வந்த உரித்தும் ஆட்சியுமாகும். இதில் என்னால் விற்பனை செய்யப்பட்ட பகுதிகள் போக நிலப்பரப்பு 19 குளி 10 இனை எனது மகளிற்கு அற்றோனி தத்துவம் மூலம் நன்கொடை வழங்கியிருந்தேன்.

நான் இவ் ஆதனத்தை தங்கு தடையற்ற ஆட்சியிலும் கட்டுப்பாட்டிலும் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக வைத்துள்ளேன். எனது மகளது பெயரிலேயே கோப்பாய் பிரதேசசபையில் சோலைவரி பதிவுகள் காணப்படுகின்றன.

குறித்த ஆதனத்திற்கு அருகில் குடியிருக்கும் சில நபர்கள் மோசடியான முறையில் வெளிப்படுத்தல் உறுதிகளை நிறைவேற்றி கபடமான முறையில் அபகரிக்க முயற்சி எடுத்து வருகின்றார்கள். குறித்த வெளிப்படுத்தல் உறுதிகளில் கிராமசேவையாளர் பிரிவு கிராம சேவையாளர் பிரிவு J/260 என மோசடியான முறையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் டச்சு வீதி, கல்வியங்காட்டில் உள்ள எனது ஆதனத்தினுடைய கிராம சேவையாளர் பிரிவு J/259 என்பதாகும். குறித்த நபர்கள் யாழ்ப்பாண நீதிமன்றில் PC/02/2023 எனும் வழக்கு தாக்கல் செய்து போது குறித்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு எனது ஆட்சியும் உரித்தும் நீதிமன்றினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொய்யான விபரங்களை குறிப்பிட்டு செய்யப்படும் விளம்பரங்களை நம்பி ஏமாற வேண்டாம் என பொதுமக்களினை கேட்டுக் கொள்கின்றேன். இவர்களுக்கு எதிராக 50 மில்லியன் நட்டஈடு கோரி என்னால் வழக்குத் தாக்கல் செய்யப்பட உள்ளது.



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.01. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org